பக்கங்கள்: 14 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 18 வெள்ளிக்கிழமை 02.07.2021 கதிர் 239

இனி இது ரகசியம் அல்ல!

பொருளாதாரப் பாதிப்புகளின் பிரதிபலிப்புக்கு இப்போதெல்லாம் காலம் செல்வதில்லை. உடனுக்குடன் அவை தெரிந்து விடுகின்றன.

கொரோனாத் தொற்றுப் பரவல், கொரோனாச் சாவு என்று பல பின்னடைவு

பக்கம்02

# மக்களின் காணிகளில் இராணுவம் விவசாயம்



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்., பலாலி பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் விவசாயப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட மிளகாய்கள் உள்ளூர் சந்தைகளில் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.பாதுகாப்புபடைத்தலைமையகத்தின் கட்டளைத்தளபதி மேஜர்ஜெனரல் பிரியந்த பெரேராவின்வழிகாட்டலுக்கு அமைய 'துரு மித்துரு நவ ரட்டக்' திட்டத்தின் கீழ் விவசாய உற்பத்தியில் தன்னிறைவை இலக்காகக் கொண்டு விவசாயப் பண்ணையில் மிளகாய் உற்பத்தியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்று இராணுவத்தினர் மேலும் தெரிவித்தனர்.

யாழ்.பாதுகாப்புபடைத்தலைமையகத்தை சூழவுள்ள பொது மக்களின் பெருமளவான நிலப்பரப்பை

2



## சீனப் பிரஜை ஆக்கிரமிக்கும் கௌதாரிமுனைக்கு

# சிறிதரன் குழுவினரை ஏற்றிச்சென்ற படகோட்டி இராணுவப் புலனாய்வாளர்களால் விசாரணை

## மீனவர்கள் கடும் கண்டனம்; அச்சுறுத்தலுக்கு அடிபணியோம் எனவும் சூளுரை

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி – கௌதாரி முனையில் கடலட்டைப் பண்ணையைப் பார்வையிடச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் செய்தியாளர்கள் ஆகியோரை ஏற்றிச் சென்ற படகு உரிமையாளரை இராணுவப் புலனாய்வாளர்கள் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

2

## மருதனார்மடத்தில் வீடு புகுந்து வன்முறைக் கும்பல் அட்டகாசம்



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்.மருதனார் மடம் சந்தைக்குப் பின்பாக உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்தவன்முறைக் கும்பல், அங்கிருந்தவர்களை அச்சுறுத்தியதுடன் ஒருவரைத் தாக்கியுள்ளது.

2

## குடாநாட்டில் வன்முறையை அடக்க பொலிஸ், இராணுவம் களம் குதிப்பு

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகரித்து வரும் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த அனைத்துப் பிரதேசங்களிலும் விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினரின் உதவியுடன் விசேட பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளை

2



## மேலும் 43 பேர் மரணம் கொரோனா காவு 3,120

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 43 உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 27 ஆண்களும், 16 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 120 ஆக அதிகரித்துள்ளது.

## 1,815 பேருக்கு நேற்று தொற்று

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,815 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின்

2

## யாழில் மேலும் ஒருவரை பலியெடுத்த கொரோனா

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளார்.

இதன்மூலம் யாழ்.மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 99ஆக உயர்வடைந்துள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நல்லூரைச் சேர்ந்த 57 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் சுகா தார விதிகளுக்கு அமைய மின் தகனம் செய்யப்பட்டுள்ளது.

## வாள்வெட்டில் துண்டாடப்பட்ட கை மீளவும் பொருத்தப்பட்டது



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், கோண்டாவில் – செல்வபுரம் பகுதியில் நேற்றுமுன் தினம் இரவு வாள்வெட்டுக்கு இலக்காகிய ஒருவரின் துண்டாடப்பட்ட கை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவ சேவையாளர்களின் கூட்டு முயற்சியால் மீளப் பொருத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்

2

## இராமேஸ்வரம் மீனவர்கள் பிடித்த மீன்கள் ஆய்வு

(ந.லோகதயாளன்)

கொழும்புத்துறைமுகத்துக்கு அருகில் 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தின் எதிரொலியாக இராமேஸ்வரம் மீனவர்கள் பிடித்துச் சென்ற மீன்களை மண்டபம் மத்திய மீன்வள ஆராய்ச்சி விஞ்ஞானிகள் நேற்று ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

2

## பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை!

### புதுக்குடியிருப்பில் நேற்று சம்பவம்

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த 45 வயதுடைய சார்ஜன்ட் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

குடும்பப் பிரச்சினை காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய வாயிலில் உள்ள காவலரணில்

2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
விடயங்களில் அண்மைக் காலத்தில் சாதனை புரிந்து வந்த கோட்டாபய ராஜபக்ஷ அரசு கடந்த திங்களன்று இன்னொரு சாதனை புரிந்தது. அதன் விளைவை நாடு மூன்று நாள்களில் சந்திக்க வேண்டியதாயிற்று.

இலங்கையில் ஒரே நாளில் பெருந் தொகைப் பணம் அச்சிட்டுப் புழக்கத்துக்கு விட்ட சாதனைதான் அது.

வரி வருமானம் குறைந்தமை, கொவிட் தொற்றுக் காரணமான முடக்க நிலைமைகள், செலவு அதிகரிப்புப் போன்ற காரணிகளை முன்நிறுத்தி, அதனால் ஏற்பட்ட வருமான இழப்பைச் சமாளிப்பதற்காக இப்படி பண நோட்டுக்களைக் கண்மூடித்தனமாக அச்சிட்டுப் புழக்கத்துக்கு விடுகின்றது 'புத்திசாலித்தனமான' நமது அரசு...!

பல்லாயிரம் கோடி ரூபா பணம் இவ்வாறு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது என்று தெரிவித்து பல புள்ளிவிவரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றை என்னால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவ்வளவு தூரம் பொருளாதார அறிவு எனக்கு இல்லை. எனினும் கண்மூடித்தனமாக பண நோட்டுக்களை அச்சிட்டுத் தள்ளுகின்றார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது.

நாட்டின் நிதிக் களஞ்சியத்தில் – சேமிப்பில் – போதியளவு தங்கம் 'றிசேர்வ்' வைத்துக் கொண்டுதான், அதற்கு எதிராகப் பண நோட்டுக்களை அச்சிட்டு வெளியிடுவது தான் பொருளாதாரம் வீழ்ந்து விடாமல் இருக்க வழி என்ற அளவுக்கு எனக்கு பொருளாதார அறிவு உண்டு.

அப்படி இல்லாமல், கண் மூடித்தனமாக – இடி அமின் ஆட்சியில் நடந்தமை போல – பண நோட்டுக்களை அச்சிட்டுத் தள்ளினால் நமது நோட்டின் பெறுமதி அடியோடு விழும், பொருள்களின் விலைகள் எகிறும், பண வீக்கம் ஏற்படும் என்றெல்லாம் பொருளாதார பற்றிய எனது சிற்றறிவுக்குப் பட்டது.

மூன்று நாள்களில் அது நிரூபணமாகி விட்டது. நேற்றுமுன்தினம் ஒரு லட்சத்து 14 ஆயிரம் ரூபாவாக இருந்த ஒரு பவுண் தங்கத்தின் விலை நேற்று ஆறாயிரம் ரூபாவால் அதிகரித்து ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவைத் தாண்டியது.

டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி என்ன தெரியுமா? தனியார் நாணய மாற்று நிறுவனங்களில் அது 228 ரூபா முதல் 230 ரூபாவாக இருந்தது.

இனியென்ன? பொருள்கள் அனைத்தினதும் விலைகள் தன்பாட்டில் எகிறும். பொதுமக்கள்தான் – அதுவும் விளிம்பு நிலையில் வாழும் மக்கள்தான் – பாவம்...!

★ ★ ★

யாழ்.மாவட்ட நிர்வாகம் என்ற பெயரில் வைபர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. மாவட்ட நிர்வாகம் தொடர்பான தகவல்களைப் பரிமாறிக் கொள்வதுதான் நோக்கம். மாவட்டச் செயலாளரின் வழிகாட்டலில் இது ஸ்தாபிக்கப்பட்டதாகத் தகவல். அப்படி மாவட்ட நிர்வாக விடயங்களில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது நல்லதுதானே என்ற உங்களின் கேள்வி புரிகின்றது.

மாவட்டத்தின் பதினைந்து பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலாளர், மேலதிக செயலாளர்கள் இருவர், உதவிச் செயலாளர் ஒருவர் என 19 பேர் மட்டுமே அந்த குறூப்பில் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 'ஆர்.ரி.' என்ற பெயரில் இருபதாவது நபர் ஒருவரும் மாவட்ட நிர்வாகிகளின் குழுவில் இணைக்கப்பட்டிருந்தார். அவர் யார் என்று பார்த்தால் பழைய பல்லவிதான்.

மாவட்டச் செயலாளரினால் இந்த குறூப் அமைக்கும் பொறுப்பு ஓர் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த அதிகாரி யாரின் விசுவாசியோ அவரின் ஆள்தான் அந்த 'ஆர்.ரி.' என்ற நபர். இந்த மாவட்டச் செயலாளரின் நிர்வாகத்தில் அமுல்பேபியின் தலையீடு தாராளம்..!

இது, இன்னொரு பிரதேச செயலகத்தில் நடந்துள்ளது. அங்கு அமுல்பேபியின் பிரதேச அமைப்பாளர்கள் தேர்வு செய்த வீட்டுத் திட்டப் பயனாளிகளின் பட்டியலை நிராகரித்த பிரதேச செயலர், சரியான பட்டியல் ஒன்றை – 73 பேரின் பெயருடன் – குறிப்பிட்டு யாழ் செயலகத்திற்கு அனுப்பியுள்ளார். அதனை யாழ் செயலகத்தில் பெற்றுக் கொண்ட அமுல்பேபி தரப்பு, தங்களின் தனிப்பட்ட அலுவலகத்துக்கு வருகை தருமாறு 73 பயனாளிகளுக்கும் அழைப்பு அனுப்பினர். வறுமையின் நிறம் சிவப்பாச்சே. வேறு வழியின்றி எப்படியாயினும் வீட்டுத் திட்டத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனக் கருதிய 53 பேர் அமுல்பேபியின் அலுவலகத்தில் தவம் கிடந்தனர்.

'மழைக் கால இருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது' என்பது போன்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்த 20 பேர் அந்த பக்கமே போகவில்லை.

கூட்டத்திற்கு வந்த 53 பேருக்கும் தாங்கள் தாம் வீட்டுத் திட்டத்தை அங்கீகரித்து, பரிந்துரைத்து வழங்குகின்றனர் என பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. கூட்டத்துக்குச் சமுகம் தாராத இருபது பேரின் பெயர்களும் பயனாளிகள் பட்டியலிலிருந்து வெட்டப்பட்டு விட்டன எனத் தெரிகின்றது.

இந்த இருபது பேரும், வடக்கு, கிழக்கின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கான அரசாங்கத்தின் விசேட ஏற்பாட்டாளர் கீதநாத் காசிலிங்கத்தின் யாழ் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள் – முறையிடவும், நீதி பெறவும்.

அவர்களுக்கு நீதி கிட்டுமா...? கடவுளுக்குத்தான் வெளிச்சம்...!

– மின்னல் –

---

## சிறிதரன் குழுவினரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கௌதாரிமுனையில் மூன்று மாதங்களாக சீன நாட்டவரால் நடத்தப்படும் கடலட்டைப் பண்ணை தொடர்பில் உள்ளூர் மீனவர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர். இது தொடர்பில் நேரில் ஆராய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர், அவரின் உதவியாளர்கள் மற்றும் செய்தியாளர்கள் ஆகியோர் கௌதாரி முனைக்கு நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் படகில் பயணித்து முற்பகல் 10.30 மணியளவில் கரை திரும்பியிருந்தனர்.

மேற்படி குழுவினர் படகில் சென்று வந்த விடயம் செய்தியாக வெளிவந்த நிலையில் இராணுவப் புலனாய்வாளர்கள் சிலர், நேற்றுமுன்தினம் மாலை மீனவர் சங்கம் ஊடாக படகின் உரிமையாளரான படகோட்டியிடம் விசாரணை நடத்தியுள்ளனர்.

காலையில் படகு சென்று வந்தமையை மாலையே கண்டுபிடிக்கும் இராணுவப் புலனாய்வாளர்களால் கடந்த மூன்று மாதங்களாக இயங்கும் சீன நாட்டவரின் கடலட்டைப் பண்ணையை மட்டும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இராணுவப் புலனாய்வாளர்களால் படகோட்டி விசாரணை செய்யப்பட்டமைக்கு மீனவர்கள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர். இவ்வாறான அச்சுறுத்தல்களுக்குத் தாம் ஒருபோதும் அடிபணியோம் என்றும் அவர்கள் கூளுரைத்துள்ளனர்.

---

## மக்களின் காணிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்கள் மற்றும் வீட்டுக்கு முன்பாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஓட்டோ, சைக்கிள் என்பவற்றை அடித்துச் சேதப்படுத்திவிட்டு குறித்த கும்பல் தப்பித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நான்கு மோட்டார் சைக்கிள்களில் வாள், இரும்புக் கம்பி மற்றும் கூரிய ஆயுதங்களுடன் வந்திறங்கிய 6 பேர் கொண்ட கும்பல் வீட்டுக்குள் புகுந்து பெறுமதியான தளபாடங்களையும், வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ, சைக்கிள் என்பவற்றையும் அடித்துடைத்து அடாவடியில் ஈடுபட்டுள்ளது. வீட்டின் முன்பக்க தகர வேலியையும் அடித்துச் சாய்த்துள்ளது.

வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் இந்த வன்முறைக் கும்பல் அடாவடியில் ஈடுபட்டது எனப் பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மக்களின் காணிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இராணுவத்தினர் கையகப்படுத்தி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவித்துள்ளனர்.

அப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் சுமார் 32 வருட காலங்களுக்கு இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்கள், உறவினர் வீடுகள், வாடகை வீடுகளில் தங்கியுள்ளனர்.

தம்மைச் சொந்த இடங்களில் மீள்குடியேற்றுமாறு கோரி பல வருடங்களாக அவர்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், பொதுமக்களின் காணிகளை, தேசிய பாதுகாப்பு எனக் கூறி , இராணுவத்தினர் கையகப்படுத்தி அதனை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி வைத்துள்ளனர்.

குறித்த காணியில் இராணுவத்தினர் விவசாயப் பண்ணைகள், கால்நடைப் பண்ணைகள் என்பவற்றை அமைத்துள்ளனர்.

---

## குடாநாட்டில் வன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முன்னெடுக்குமாறு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகே அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், பொலிஸ் காவலரன்களையும் அதிகரிக்குமாறு சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அண்மைய நாள்களாக வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. வீடுகளுக்குள் அத்துமீறும் வாள்வெட்டுக் கும்பல்கள் அங்குள்ளோரை அச்சுறுத்தும் வகையில் அட்டூழியத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகேயிடம் வினவியபோது,

வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை தொடர்பில் விசேட விசாரணைகளை முன்னெடுக்கப்படுகின்றன. வன்முறையில் ஈடுபடுவோர் கைதுசெய்யப்படுவார்கள்.

அனைத்துப் பிரதேசங்களிலும் விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினரின் உதவியுடன் விசேட பொலிஸ் ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் பொலிஸ் காவலரண்களை அதிகரிக்குமாறும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்குப் பணித்துள்ளேன்.

அத்துடன், சில பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவை தொடர்பில் விசாரணைகளை இடம்பெறுகின்றன.

பொதுமகன் ஒருவர் தனது முறைப்பாட்டை ஏற்க பொலிஸ் நிலையத்தில் மறுப்பு தெரிவிக்கப்பட்டமை தொடர்பில் எனது வட்ஸ்அப் இலக்கத்துக்கு தகவல் அனுப்பியிருந்தார். அவரது முறைப்பாட்டை ஏற்க மறுத்தமை தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன. அத்துடன், முறைப்பாட்டாளர்கள் பலரது முறைப்பாடுகள் தேங்கிக் கிடைக்கின்றன. அவை தொடர்பில் எனது கண்காணிப்பின் கீழ் துரித விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே, பொதுமக்கள் வன்முறைச் சம்பவங்கள், பொலிஸ் அலுவலகர்களின் நடவடிக்கைகள் தொடர்பில் எனது 0718592200 என்ற வட்ஸ்அப் எண்ணுக்கு தகவல்களை வழங்கினால் உடனடி நடவடிக்கைக்கு அறிவுறுத்தல் வழங்குவேன் – என்றார்.

---

## 1, 815 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 60 ஆயிரத்து 904 ஆக எகிறியுள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 27 ஆயிரத்து 840 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 29 ஆயிரத்து 944 ஆக அதிகரித்துள்ளது.

## இராமேஸ்வரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கடந்த மே மாதம் 23ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்தில் குறித்த கப்பலில் இருந்த பெட்டகங்கள் தீயில் எரிந்து நாசமாகின.

பெட்டகங்களில் இருந்த அழகுசாதனப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருள்கள் கடலில் கலந்ததால் இலங்கை கடற்கரை பகுதியில் கடந்த சில வாரங்களாக சுமார் 200 இற்கும் மேற்பட்ட அரிய வகை கடல்வாழ் உயிரினங்களான கடல் ஆமைகள், டொல்பின், சுறா உள்ளிட்டவைகள் இறந்த நிலையில் கரை ஒதுங்கி வருகின்றன.

இந்நிலையில், 75 நாள்கள் மீன்பிடி தடைக்காலம் முடிந்து இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று மீன்பிடியில் ஈடுபட்டு கரை திரும்பினர். இராமேஸ்வரம் மீனவர்கள் பிடித்துச் சென்ற கணவாய், இறால், மீன்கள் உள்ளிட்டவைகளை மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானி ரம்யா தலைமையிலான விஞ்ஞானிகள் குழு ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வில் மீனவர்கள் பிடித்துச் சென்ற மீன்களின் செதிகளில் எண்ணெய் மாதிரிகள் ஏதேனும் உள்ளனவா அல்லது மீன் வாய்களில் பிளாஸ்டிக் துகள்கள் உள்ளனவா என்று ஆய்வு செய்தனர். அதே போல் இறால்கள், நண்டுகளின் உருவ அமைப்பு நீளம், அகலம் உள்ளிட்டவைகள் முழுமையாக ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

ஆய்வின் முடிவு குறித்து விரைவில் அறிக்கை தாக்கல் செய்யப்படவுள்ளது என விஞ்ஞானிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## வாள்வெட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சை கூடத்தில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட சத்திர சிகிச்சை நேற்று அதிகாலை 4 மணிக்கு வெற்றிகரமாக நிறைவடைந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒட்டுறுப்பு சத்திரசிகிச்சை வல்லுநர் இளஞ்செழிய பல்லவன் தலைமையில் நரம்பியல் சத்திர சிகிச்சை வல்லுநர் பொன்னம்பலம் ஆதித்தன், மயக்க மருந்து மருத்துவ வல்லுநர் மற்றும் மருத்துவர்கள், தாதியர்கள் எனக் கூட்டுச் சேவையால் கை துண்டாடப்பட்டவருக்கு வெற்றிகரமாக சத்திர சிகிச்சை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் – செல்வபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் 8 பேர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

குறித்த வீட்டில் ஸ்ரூடியோ ஒன்றை நடத்தி வந்தவர்கள் இரவு தங்கியிருந்த போது 6 பேர் கொண்ட குழுவினர் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

வாள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் வந்த கும்பல் வீட்டைத் தாக்கியும் குறித்த ஸ்ரூடியோ அமைந்திருக்கும் பகுதியை தீ மூட்டி கொளுத்தியும் சேதப்படுத்தியுள்ளது.

இதன்போது கார் மற்றும் ஓட்டோ என்பன கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் இளைஞர் ஒருவரின் கை துண்டாடப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

படுகாயமடைந்தவரின் வெட்டப்பட்ட கைக்கான குருதி ஓட்டம் தடைப்பட்டு உடலில் ஏனைய பகுதிகளில் காயங்களும் காணப்பட்டுள்ளன.

அந்நிலையில், அவருக்கு உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவ வல்லுநர்களினால் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

---

## பொலிஸ் உத்தியோக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கியை எடுத்து தனக்குத்தானே தலையில் சுட்டுக்கொண்ட குறித்த சார்ஜன்ட், ஆபத்தான நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் அங்கு அவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பொதுமக்களின் காணிகளை அபகரிக்க முயன்ற சட்டத்தரணி

## மக்கள் குற்றச்சாட்டு

திருகோணமலை – பன்குளம் பிரதேசத்தில் யுத்த காலத்தின் போது விட்டுச்சென்ற பொதுமக்களின் காணிகளை சட்டத்தரணியொருவர் அபகரிக்க முயன்ற சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

பன்குளம் பிள்ளையார் கோயிலுக்கு முன்னால் உள்ள காணியிலேயே கடந்த புதன்கிழமை இந்த அபகரிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

1968 ஆம் ஆண்டில் பன்குளம் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து மீண்டும் மீள் குடியேற்றப்பட்ட நிலையில், குறித்த காணி உரிமையாளர்கள் வாழ்ந்து வந்தனர் எனவும் இதனையடுத்து அவர் உயிரிழந்த நிலையில் அவரது பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் வசித்து வந்தனர் எனவும் அக்கிராமத்தில் வசித்து வரும் கதிர்வேல் என்பவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் வசித்து வரும் பிரபல சட்டத்தரணி ஒருவருக்கு பிரதேசத்தில் 100 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் இருக்கின்றன எனவும், இதேவேளை பிள்ளையார் கோயிலுக்கு முன்னால் உள்ள காணி தன்னுடையது எனத் தெரிவித்து காணிக்குள் வருகை தந்த போது அக்கிராம மக்கள் தங்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதேவேளை, மொரவெவ பொலிஸ் பொறுப்பதிகாரி சம்பவ இடத்துக்கு விஜயம் செய்து காணி தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளன எனவும் வழக்கில் முடிவு கிடைக்கும் வரை எவரும் செல்ல வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில் குறித்த காணி தொடர்பிலான அத்தாட்சிகள் தன்னிடம் இருக்கின்றன என சட்டத்தரணி இதன்போது பொலிஸாரிடம் குறிப்பிட்டார்.

ஆனாலும் கிராம மக்கள் அக்காணி சட்டத்தரணிக்கு சொந்தம் இல்லை எனவும் இது பொதுமகனுக்குரிய காணி எனவும் சட்டத்தரணி நுழைய வேண்டாம் எனவும் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை முன்வைத்தனர்.

# சீனாவிடமிருந்தும் கிழக்கை மீட்கும் நிலைமையும் வரலாம்

## இரா.சாணக்கியன் ஆரூடம்



கிழக்கை மீட்கப்போகின்றோம் என்று கூறிவிட்டு வந்தவர்கள் எதனையும் மீட்க முடியாமல் நிற்கின்றனர். வருங்காலத்தில் சீனாவிடமிருந்தும் கிழக்கை மீட்க வேண்டிய நிலைமையும் வரலாம் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர் –

சீனா அனைத்து நாடுகளையும் தங்கள் கைவசமாக்குவதற்கு பயன்படுத்தும் உத்தியே கடன் கொடுத்து அதன் மூலம் அந்த நாட்டுக்குள் ஊடுருவும் செயற்பாடுகளையே சீனா வழமையாக செய்து வருகின்றது.

பல நாடுகளை சீனா இவ்வாறு தன்வசமாக்கியுள்ளது. ஜன்டியா போன்ற நாடுகளில் சந்தைகளில் கோழி விற்பனை செய்பவர்கள் கூட சீன நாட்டவர்களாகவே உள்ளனர். அவ்வாறு இருக்கும் போது நாங்கள் மட்டுமே அவர்களை அழைத்து தொல்லையை வீட்டுக்குள் எடுக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு பகுதியே அதிக வளம்கொண்ட பகுதியாகும். இலங்கையில் அந்நியர் ஆட்சிக் காலத்தில் கரையோரப் பகுதியே அதிகளவில் இலக்கு வைக்கப்பட்டிருந்தது. 1815 ஆம் ஆண்டு வரைக்கும் அவர்கள் கண்டி இராசதானியைக் கைப்பற்றவில்லை.

கண்டி இராசதானியை கைப்பற்றியது. ஓர் இடத்தையும் விட்டு வைக்கவில்லையென்பதை காண்பிக்கவே. நுவரெலியாவினை கூட ஒரு சுற்றுலா மையமாகவே பயன்படுத்தியுள்ளனர். சீனர்களுக்கு அநுராதபுரத்திலேயே, பொலன்னறுவையிலையோ இருப்பதை விட வடக்கு, கிழக்கில் தான் கரையோரப்பகுதி மூன்றில் இரண்டு உள்ளது.

இன்று கடலட்டை வளர்ப்பார்கள், நாளை கொச்சி தோட்டம் செய்வார்கள், எங்கள் ஆற்றில் வந்து மீன்பிடிப்பார்கள். இது சீனாவின் ஊடுருவல் திட்டம். துறைமுக நகரமென்பதை காட்டி வரி செலுத்தாமல் இருப்பதற்கான திட்டமாகவும் இருக்கலாம்.

துறைமுக நகரில் பதிவுசெய்துவிட்டு வெளியில் சென்று தமது நடவடிக்கைகளை சீனர்கள் முன்னெடுக்க முடியும். இது ஆரம்பம் மட்டுமே. இன்று கிழக்கை மீட்கப் போகின்றோம் என்று கூறிவிட்டு வந்தவர்கள் எதனையும் மீட்க முடியாமல் நிற்கின்றனர். வருங்காலத்தில் சீனாவிடமிருந்தும் கிழக்கை மீட்க வேண்டிய நிலைமையும் வரலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

# கஞ்சாவுடன் இளைஞன் கைது 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிப்பு

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவருக்கு நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 21 வயதுடைய இளைஞன் ஒருவர் 3 ஆயிரம் மில்லிக்கிராம் கஞ்சாவுடன் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கடந்த புதன்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்றத்தால் ரூபா பத்தாயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை – இஸ்ரேல் இடையே உடன்படிக்கை கைச்சாத்தானது

இஸ்ரேலின் ஏரோஸ்பேஸ் இன்டஸ்ட்ரீஸ் இலங்கை வான் படையின் கெஃபிர்வானூர்திகளை மேம்படுத்த இலங்கையின் பாதுகாப்பு அமைச்சகத்துடன் 5 கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளது.

கெபிர் வானூர்திகளின் அடிப்படை மின்னணுவியல் கருவிகளை, மேம்பட்ட 4 பிளஸ் தலைமுறை போர் வானூர்தி மின்னணுவியல் கருவி மூலம் மாற்றுவது, ரேடார் மேம்படுத்தல், தகவல் தொடர்பு அமைப்புகள் மற்றும் புதிய ஹெல்மெட் என்பன இந்த ஒப்பந்தத்தில் அடங்குகின்றன.

மேம்படுத்தல் செயல்பாட்டில் இலங்கை வான்படை பணியாளர்களுக்கு அறிவு மற்றும் திறன்களை மாற்றுவதும் அடங்கும்.

கெபிர், முதன்முதலில் உருவாக்கப்பட்டபோது போர்க்களத்தில் ஒரு கள நிலைவர மாற்றியாகப் பயன்பட்டது.

அந்த வானூர்திகள், கனமான வெடி மருந்துகளை எடுத்துச் செல்லவும், எதிரிகளின் இலக்குகளை துல்லியமாக அடையவும் பயன்படுத்தப் பட்டன.

# அத்துமீறி வீடு புகுந்து பெண்கள் மீது தாக்கு!

மாரவில, மாவில பிரதேசத்தில் அமைந்துள்ள வீடு ஒன்றில் அத்துமீறி பிரவேசித்த கும்பல் ஒன்று அங்கிருந்த மூன்று பெண்களை கொடூரமாகத் தாக்கியுள்ளது.

குறித்த வீட்டினுள் பிரவேசிக்கும் பெண்கள் சிலர் அங்கிருந்த பெண்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளும் நிலையில் பின்னர் அங்கு ஆண்கள் சிலரும் புகுந்து குறித்த பெண்களை தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. காதல் விவகாரம் காரணமாகவே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் இடம்பெற்ற பின்னர் சம்பவ இடத்தில் இருந்து வாள்கள், பொல்லுகள் மற்றும் இரும்புச் சங்கிலிகள் கண்டுபிடிக்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பணியாளர்களுக்கான இரண்டாம் கட்ட கொரோனா தடுப்பூசி ஏற்றல் நேற்று 01 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின்



விசேட அறிவுறுத்தலுக்கு அமைய வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஏற்பாட்டில் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியினால் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது




காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பஸில் அரசுக்குள் குழப்பம்

ராஜபக்ஷ சகோதரர்களில் இளையரான பஸில் ராஜபக்ஷவின் நாடாளுமன்ற வருகை ஆளும் கட்சிக் கூட்டுக்குள் சலசலப்பை ஏற்படுத்தியிருப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஓரிரு மாதங்கள் அமெரிக்காவில் அஞ்ஞாதவாசம் இருந்த பஸில் ராஜபக்ஷ கடந்த வாரம் நாடு திரும்பி விட்டார். அவர் வெளிநாட்டில் இருந்து வருகை தந்தவர் என்ற முறையில் தனிமைப்படுத்தலில் இருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. இருந்த போதிலும் அங்கிருந்தபடியே தமது அரசியல் காய் நகர்த்தல் நடவடிக்கைகளை அவர் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார் என்றும் தெரிகின்றது.

ஏற்கனவே கடந்த பொதுத் தேர்தலில் எந்த வேட்பாளர் பட்டியலிலும் பெயர் இல்லாத அவரை திடுதிப்பென தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாக்குவதில் சட்ட நெருக்கடிகள், இக்கட்டுக்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. எனினும், தாம் நியமித்த – தமக்குத் தோதான – தேர்தல் ஆணையமே இப்போது அதிகாரத்தில் இருப்பதால், தேசியப் பட்டியல் எம்.பி. நியமனம் தொடர்பாக பூர்வாங்கமாக – தேர்தல் ஆணைய மட்டத்தில் – கிளப்பப்படக் கூடிய எந்த ஆட்சேபனையையும் தாண்டி, நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள முடியும் என்று பஸில் ராஜபக்ஷ தரப்பு நம்புகின்றது. அந்தக் கையோடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைத்தால் அவர் அமைச்சராகவும் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ள முடியும்.

எனினும் அவர் ஏதேனும் ஒரு கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுகின்றமையை எதிர்க் கட்சிகள் பொருத்தமான நீதிமன்றத்தில் சட்டச் சவாலுக்கு எடுத்துச் சென்றால் – நிச்சயம் எடுத்துச் செல்லும் என்று கூறப்படுகின்றது – பஸில் ராஜபக்ஷ தரப்பு சில, பல நெருக்கடிகளை எதிர்கொள்வது தவிர்க்கவே முடியாததாக இருக்கும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அதற்கிடையில் அடுத்த வாரத்தில் பஸில் ராஜபக்ஷ எம்.பியாக நியமிக்கப்படுகின்றமையையும், அவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படவிருக்கின்றமையையும் எதிர்த்து ஆளும் பொதுஜன பெரமுனவின் கூட்டுக் கட்சிகள் – குறிப்பாக சிறிய கட்சிகள் – போர்க்கொடி தூக்கியிருக்கின்றன என்று கொழும்பு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே அரசின் செல்வாக்கு மோசமாக சரிந்து வருகின்றது என்ற புலனாய்வுத் தகவல்கள், அறிக்கைகள் அரசுத் தலைமைப் பீடத்துக்குக் கிடைத்து வருகின்றன.

ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் பெரு வெற்றியீட்டிய பொதுஜன பெரமுனவின் ஆதரவுத் தளம் தேய்ந்து செல்வது கண்கூடு.

கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் தவறான கையாள்கை, பெரும் பொருளாதாரப் பின்னடைவு, மோசமாக எகிறும் விலைவாசி, சர்வதேச விவகாரங்களைக் கையாவதில் தோல்வி, அதனால் நாட்டுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் என்று பல சிக்கல்களில் நாடும் அரசும் மாட்டிக் கொண்டிருக்கும் நிலைமை.

ஒரே நாளில் பவுணின் விலை எக்கச் சக்கமாக உயர்ந்துள்ளது. டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி மோசமாக வீழ்ந்துள்ளது. போகின்ற போக்கில் ஒரு டொலருக்கான இலங்கை ரூபாவின் பெறுமதி இரு நூற்றியைம்பது ரூபாயை எட்டுவது வெகு தொலைவில் இல்லை. இன்னும் ஓரிரு வாரத்துக்குள் நடக்கலாம் என்று எதிர்வு கூறும் நிலைமை.

இந்த நெருக்கடிகளால் தனது ஆதரவுத் தளத்தை அடியோடு இழந்து வரும் ராஜபக்ஷ அரசு அதன் காரணமாக மாகாண சபைத் தேர்தலை நடத்தும் எண்ணத்தைக் கையே விட்டு விட்டது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் ஆகியவற்றில் அமோக வெற்றியீட்டிய ராஜபக்ஷக்கள் அந்தச் சூட்டோடு மாகாண சபைத் தேர்தலையும் நடத்தி வெற்றிக்கொடி நாட்டுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், எதிர்பாராத விதத்தில் – எதிர்பாராத வேகத்தில் – ராஜபக்ஷக்களின் ஆட்சிப் பீடம் விரைந்து தனது ஆதரவுத் தளத்தை இழந்து வருகின்றது. அதனால் இப்போது மாகாண சபைத் தேர்தல்களை நடத்திக் கையை சுட்டுக் கொள்ள அது தயாரில்லை என்று கூறப்படுகின்றது.

அத்தகைய ஆதரவு இழப்பைச் சந்தித்து, நெருக்கடி திசையை நோக்கி அரசு நகர்ந்து கொண்டிருக்கையில், மற்றொரு சகோதரரான பஸில் ராஜபக்ஷவை அரசுக்குள் கொண்டு வருவதற்காக சிறிய கட்சிகளை – விமல் வீரவன்ஸ, உதயகம்மன்பில, ரிரான் அலஸ், வாசுதே நாணயக்கார போன்றோரின் கட்சிகளை – பகைத்துக் கொள்ளவோ, அவற்றின் ஆதரவை இழக்கவோ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரும்புவாரா என்பதே கேள்வி.

இந்த சிறிய கட்சிகளுடன் முரண்பட்டுக் கொண்டு பஸிலை அரசுக்குள் கொண்டு வரும் முயற்சியை ராஜபக்ஷக்கள் முன்னெடுப்பார்களாயின் அதுவே அரசின் சரிவு காலத்தின் ஆரம்பம் என்றாவதைத் தவிர்க்க முடியாமல் போகும்.

## இந்தியாவின் பகையை சம்பாதிக்கக்கூடிய நிலைமையையே அரசு ஏற்படுத்துகின்றது

### கோவிந்தன் கருணாகரம் எம்.பி. வேதனை



இந்தியாவின் பகையை சம்பாதிக்கக் கூடிய நிலைமையையே தற்போதைய அரசு ஏற்படுத்தி வருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

'இலங்கை சீனாவின் மாகாணம் போன்று செயற்படுகின்றமை மேற்குலக நாடுகளுக்கோ இந்தியாவுக்கோ விரும்பத்தகாத செயலாக உள்ளது.

வடக்கு, கிழக்கில் சீனர்களின் ஆதிக்கத்திற்கு இந்த அரசாங்கம் இடமளிக்கின்றது என்றால் நேரடியாக இந்தியாவின் பாதுகாப்பை அதுபாதிக்கும் என்னும் வகையில் நேரடியாக இந்தியாவின் பகையை சம்பாதிக்கக்கூடிய நிலையையே இந்த அரசாங்கம் ஏற்படுத்திவருகின்றது.


கொரோனா காரணமாக இந்த நாட்டின் நிலைமை மிக மோசமாகச் சென்று கொண்டிருக்கின்றது. தொற்று நோய்க்கான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே ஓர் அறிக்கை விடுகின்றார்.

கொரோனா செயலணிக்கான பொறுப்பான இராணுவத்தளபதி சவேந்திரா சில்வா வேறுவிதமான அறிக்கை விடுகின்றார். சுகாதார அமைச்சர் இன்னுமொரு அறிக்கை விடுகின்றார். நாட்டு மக்கள் தற்போதைய நிலையில் குழப்பமான நிலையிலிலுள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளேயின் அறிக்கையின்படி அல்பா, டெல்டா சில வாரங்களில் பரவி ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்கும் நிலையேற்படும் என்று கூறுகின்றார்.

முதலாம் இரண்டாம் அலையில் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தி கொரோனாத் தொற்றை ஓரளவு கட்டுப்படுத்தினார்கள். மூன்றாவது அலையில் பயணக்கட்டுப்பாடு என்று கூறி ஒரு நகைச்சுவையான நாடகம் நடைபெற்று வருகின்றது. – எனத் தெரிவித்துள்ளார்.

## கப்பல் தீ விபத்தால் மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட தடை நீடிக்கப்பட்டது



தீ விபத்துக்கு உள்ளான எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் மூழ்கியுள்ள கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மீன்பிடிப் படகுகள் உள்ளிட்ட உடைமைகளுக்கு ஏற்படக்கூடிய சேதத்தை தடுக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், குறித்த தடையை நீக்குவது தொடர்பாக ஆராய்ந்து வருகிறோம் எனவும் அவர் கூறியுள்ளார்.

நீர்கொழும்பு, கொழும்பு, பாணந்துறை மற்றும் களுத்துறை கடற்பிராந்தியங்களில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு கடந்த மே மாதம் 22 ஆம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மருத்துவ உத்தியோகத்தர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை நீடிப்பு

அரச சேவையில் பணியாற்றும் மருத்துவ உத்தியோகத்தர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 63 ஆக நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை இதற்கு முன்னர் 61 ஆக இருந்த நிலையில், குறித்த வயதெல்லை 63 ஆக நீடிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 20 ஆம் திகதி, மருத்துவ உத்தியோகத்தர்களின் ஓய்வு பெறும் வயதை 63 ஆக நீடிக்க ஓய்வூதிய சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## சொறிக்கல்முனை மாற்றுத்திறனாளிகளுக்கு கனடா அபி நற்பணிமன்றத்தால் உலருணவு

### 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொதி விநியோகம்





(காரைதீவு நிருபர் வி.ரி.சகாதேவராஜா)

சமகால கொவிட் தாக்கத்தாலும் பயணத் தடையாலும் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தையிழந்த அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய கிராமமான சொறிக்கல்முனையின் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒருதொகுதி உலருணவு நிவாரணம் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டது.

கொரோனா காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் பசியைப்போக்க கனடா டொராண்டோ கஜ் அபி நற்பணிமன்றம் இதற்கான அனுசரணையை வழங்கியிருந்தது.

குறிப்பாக மாற்றுத்திறனாளிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப்பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. ஒவ்வொருவருக்கும் 25 கிலோ அரிசி, பால்மா உள்ளிட்ட உணவுவகைகள் பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தகக்து.

இந்த உலருணவு நிவாரணப் பொதிகளை சமூகசேவையாளரும் காரைதீவு பிரதேசசபைத் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் வழங்கிவைத்தார்.

மாற்றுத்திறனாளி அனுசியா தலைமையில் இடம்பெற்ற நிவாரணப்பணியை சமூக செயற்பாட்டாளர் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தனார்.




இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம். தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

தொகுப்பு:-
எஸ். சாரலன்

## 38ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**371. 1983 ஆம் ஆண்டு இலங்கையில் மொத்த கடல் உணவு உற்பத்தியில் முதலிடம் வகித்த மாவட்டம் எது?**

**372. ஐரோப்பாவின் போர்க்களம் என அழைக்கப்படும் நாடு எது?**

**373. மணிமேகலை நூலின் ஆசிரியர் யார்?**

**374. 8 இருந்து 1 இனை எத்தனை முறை எடுக்கலாம்?**

**375. மோனாலிசா ஓவியத்தை வரைந்தவர் யார்?**

**376. இலங்கையில் எத்தனையாம் ஆண்டு ரி - 20 உலகக் கிண்ணம் நடைபெற்றது?**

**377. இலங்கையின் பழைமையான நூல் எது?**

**378. இலங்கையை ஆட்சி செய்த நாயக்க வம்சத்தின் முதல் மன்னன் யார்?**

**379. இதயத்தில் எத்தனை அறைகள் உண்டு?**

**380. பாரதிதாசனின் இயற்பெயர் யாது?**

பெயர் :- ............................................... அடையாள அட்டை:- ...............................
முகவரி :- ............................................... மின்னஞ்சல் முகவரி:- ...............................
தொலைபேசி இலக்கம்:- ..........................

## 36ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**361. சிரஞ்சீவி**
**362. சுவாமி விபுலானந்தர்**
**363. ஔவையார்**
**364. விற்றமின் B**
**365. சிவப்பு, இளஞ்சிவப்பு**
**366. கலிங்க வம்சம்**
**367. காசியப்பன்**
**368. தூபராம**
**369. 06**
**370. 20**

## 30ஆம் திகதி வெளியான 36ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1. ஏ.துஷான் - நீர்வேலி - (10 சரி)
2. த.சராதரன் - குப்பிளான் (10 சரி)
3. ஜெ. வினோஜன் - குடத்தனை (10 சரி)
4. செ. ஸ்ரீஇராமச்சந்திரன் (09 சரி)
5. ஆர். மாலதி - உடுப்பிட்டி (09 சரி)
6. எச். றிஸ்மிஜா - கண்டி (08 சரி)
7. யூ.ஜமாலை - கொழும்பு (09 சரி)
8. ஐ. கார்த்திகன் - யாழ்ப்பாணம் (09 சரி)
9. ஏ.சி.ஸ்ரீதரன் - கொழும்பு (08 சரி)
10. கே. அனுஷன் - ஏழாலை (08 சரி)
11. எம். வர்ணபாலன் - யாழ்ப்பாணம் (08 சரி)
12. எஸ். சதுர்ஜினி - அல்வாய் (08 சரி)
13. பி.தனுஜா - நேரியகுளம் (07 சரி)

## சிறுகதைக்கான பொதுநலவாய விருதை வென்றார் இலங்கைப் பெண் எழுத்தாளர்

2021ஆம் ஆண்டுக்கான சிறந்த சிறுகதைக்கான பொதுநலவாய விருது இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளரும் முன்னாள் ஊடகவியலாளருமான கான்யா டி அல்மெய்டாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்த விருதைப்பெறும் முதலாவது இலங்கையராக கான்யா டி அல்மெய்டா பதிவாகியுள்ளார்.

6 ஆயிரத்துக்கு மேற்பட்டோரிடம் இருந்து கிடைத்த விண்ணப்பங்களில் ஆசியாவில் சிறந்த சிறுகதைக்கான விருது கடந்த மே மாதத்தில் வழங்கப்பட்டது. இதற்கமைய, அவருக்கு உலக விருது இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தரமற்ற முகக்கவசம் விற்பனைக்குத் தடை

சந்தைகளில் விற்பனை செய்யப்படும் தரச்சான்றிதழ் அற்ற தரமற்ற முகக் கவசங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சந்தைகளில் தரமற்ற முகக்கவசங்கள் இந்நாள்களில் விற்பனை செய்யப்படுகின்றன என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அணியப்படும் முகக் கவசத்துக்கு தரச்சான்றிதழ் கட்டாயமாகும் என அந்த அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற ஜெனரல் ஷாந்த திசாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்துமாறு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 02

இலங்கையில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட கல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்குவது தொடர்பாக கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அதற்கமைய, அனைத்து பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தடுப்பூசி செலுத்துமாறு துணை வேந்தர்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் எனவும் துணைவேந்தர்கள் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் வைத்திய பரிந்துரைகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதை விரைவுபடுத்துமாறும் துணைவேந்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி டுேர்ட்டே இலங்கைக்கு நன்றி பாராட்டு



கொவிட் தொற்று நோய்களுக்கு மத்தியில், வெளிநாட்டு பிலிப்பைன்ஸ் தொழிலாளர்களுக்கு குறிப்பாக அவர்களை திருப்பி அனுப்ப உதவியதற்காக பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரொட்ரிகோ டுேர்ட்டே, இலங்கைக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி ஜுன் 28 அன்று டுேர்ட்டேயும் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் தொலைபேசி உரையாடலில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உரையாடலின் போது இரண்டு தலைவர்களும் இரு தரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

கொவிட் தொற்றுநோய்க்கு மத்தியில் பிலிப்பைன்ஸ் பிரஜைகளைத் திருப்பி அனுப்புவதற்கு உதவியதற்காகவும், செப்ரெம்பர் 2020 இல் இலங்கையின் கிழக்கு கடற்கரையில் தீப்பிடித்த எம்.டி. நியூ டயமண்டில் இருந்த பிலிப்பைன்ஸ் கடற்படையினரை பாதுகாப்பாக திருப்பியனுப்பியமைக்காகவும், இலங்கை அரசாங்கத்துக்கு பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, தொழிலாளர், இடம்பெயர்வு மற்றும் சுற்றுலா உள்ளிட்ட ஒத்துழைப்பின் பிற துறைகளையும் இரண்டு தலைவர்களும் கலந்துரையாடியுள்ளனர்.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

**இன்று அவரது நூறாவது பிறந்ததினம்**

● ந.வித்தியாதரன்

இலங்கையின் தமிழ் ஊடகத் துறை வரலாற்றில் ஜாம்பவான் என்றால் அது எஸ்.டி. சிவநாயகம் (எஸ்.டி.எஸ்.) ஐயா அவர்கள்தாம். அவரது நூறாவது பிறந்த நாள் இன்று. அவரது பிறந்த தினம் 02-07-1921. அவரை குருவாய்ப் பெற்றமை நமக்குக் கிடைத்த பேறு.

அவர் சொல்லித் தந்தவை கொஞ்சம் என்றாலும், அவருக்குப் பக்கத்தில் இருந்து பார்த்துப் படித்துப் பட்டறிந்து கேட்டவை அனேகம்.

என் தந்தையாரின் நெருங்கிய நண்பர். அவருடன் உற்ற தம்பியாய்ப் பழகியவர். நம் திருகோணமலையில் சிவன் கோவிலடியில் முகிழ்த்தவர்.


முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது நெடுஞ்செழியன், அறிஞர் அண்ணாத்துரை, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோரோடு அமர்ந்திருக்கும் எஸ்.டி.சிவநாயகம்.

தமிழைத் தமிழாய் எழுதச் சொல்லித் தந்தவர். இலகு தமிழில் எழுத வேண்டும் என்பதைப் போதித்தவர். சில விடயங்களை ஆணி அடித்தால் போல எழுதுவதற்கும் வழிப்படுத்தியவர்.

செய்திகளில் ஒருமை - பன்மை, உயர்திணை அஃறிணை தவறாமல் பிரயோகிக்கும் வழக்கத்தை நுணுக்கமாக அவதானித்து வழிப்படுத்தியவர் அவர்.

மரபுக் கவிதைகள் கைவந்த வல்லாளர். யாப்பிலக்கணப்படி எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை முதலியவற்றையும் பாக்கள், ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா போன்றவற்றின் இலக்கணங்களையும் கற்றறிந்து தேறியவர்.

எல்லாத் துறைகளிலும் சற்றேனும் கற்றுத் தேர்ந்தவர்களே வெற்றிகரமான ஊடகவியலாளர்களாக வர முடியும் என்பது அவர் கருத்து.

"நீங்கள் விளையாட்டு வீரனாக இருக்கத் தேவையில்லை. கிரிக்கெட் நிபுணனாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் கிரிக்கெட் ஆட்டத்தில் 4 - 0 என்ற கோல் கணக்கில் வென்றார்கள் என்று செய்தி போகாமல் பார்த்துக் கொள்ளும் அறிவு உங்களுக்கு அவசியம். ஒரு நகரத்துக்கு புதிதாக ஜெனரேட்டர் வந்தால் அதன் சக்தி வலுவை என்ன அளவு வீட்டில் மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற அளவுக்கு உங்களுக்குப் பௌதீகம் தெரிந்திருக்க வேண்டாம். இந்த வகையில் சட்டம், மருத்துவம், இரசாயனம், சமூகவியல், அரசியல், பொது அறிவு என அனைத்துத் துறைகளிலும் நீங்கள் நுனிப்புல்லாவது மேய்ந்திருக்க வேண்டும். கண்டதும் கற்று பண்டிதனானவனே வெற்றிகரமான ஊடகவியலாளனாவான்." - இதுவே அவர் போதித்த பாடம்.

நம் எழுத்துக்கு வாசிப்பும் தேடலும் அத்தியாவசியமானவை என்பதை நமக்கு உணர்த்திய ஆசான் அவர்.

எண்பதுகளிலேயே கணினி பற்றி அறிந்து, பேசி, அத்துறையில் அதிக அறிவும் நாட்டமும் கொண்டிருந்தவர்.

கமராவா, மணிக்கூடு திருத்துவதா, அக்குபஞ்சர் முதல் ஆயுள் வேத வைத்தியம் வரை மருத்துவத் துறையா, தமிழ் இலக்கணம், இலக்கியமா, அரசியலா யாவற்றிலும் துறை தோய்ந்த பல்துறை நிபுணர் அவர். அந்த நேரத்து அச்சுக் கலையையும் கரைத்துக் குடித்தவர்.

அவரது தந்தையார் சின்னத்தம்பி வேட்டையாடுவதற்கு வெள்ளைக்காரன் காலத்தில் இருந்தே 'லைசென்ஸ்' துப்பாக்கி வைத்திருந்தவர். அதனால் இளவயதிலே வேட்டைப் பிரியராக இருந்தவர் எஸ்.டி.எஸ். அவர்கள்.


'வீரகேசரி'யிலிருந்து விடை பெறுகின்றார் ஆசிரியர் வெங்கட்ராமன். வழியனுப்பி வைப்பவர்களில் ஒருபுறம் எஸ்.டி.எஸ்., மறுபுறம் கே.வி.எஸ்.வாஸ்.

கமரா மீது இருந்த காதலினால் இளவயதில் படப்பிடிப்புத் துறையில் அதிகம் கற்க நாற்பதுகளின் ஆரம்பத்தில் சென்னை புறப்பட்டார். 'மோர்டேன் ஸ்டூடியோ'வில் பயின்று கொண்டு சினிமா உலகிலும் சுற்றிய போதுதான் ஈ.வே.ராவின் திராவிட இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டது. 'விடுதலை' பத்திரிகையில் எழுதும் வாய்ப்பும் கிட்டியது.

படு நாஸ்திகராக வாழ்வியலைத் தொடங்கிய சிவநாயகம் ஐயா சத்தியசாயி பாபாவின் தெய்வீக அருள் பார்வையால் ஆஸ்திகரானார். அது ஒரு நீண்ட காதை.

எஸ்.டி.சிவநாயகம், செங்குத்தா முதலியார் பரம்பரையைச் சேர்ந்தவர். இப்போதும் நல்லூர், கல்வியங்காட்டுப் பகுதியில் இந்த மரபினரே அதிகம் வசிக்கின்றனர். இதே மரபுடன் - முதலியார் வம்சத்துடன் - நெருக்கமான நெடுஞ்செழியனின் உறவு இதன் காரணமாக எஸ்.டி.எஸ்ஸுக்கு தமிழகத்தில் கிடைத்தது.

நெடுஞ்செழியன் மூலம் அறிஞர் அண்ணாத்துரையுடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றார் சிவநாயகம். பின்னாள்களில் அறிஞர் அண்ணா தமது காலத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் இலங்கைத் தமிழ் பத்திரிகையாளர் சிவநாயகத்தை விருந்தினர்களுள் ஒருவராக அழைத்து கௌரவித்தார். 'அண்ணாவுடன் ஆறு சந்திப்புகள்' என்ற தொடரை எழுதினார் அவர்.

நாற்பது நடுப்பகுதியில் தமிழகத்தில் இருந்து திரும்பிய எஸ்.டி.எஸ். தமது மனைவியின் ஊரான மட்டக்களப்பில் தாமரைக்கேணியில் 'சித்ரா ஸ்டூடியோ' வைத்திறந்தார். 'உதயன்' என்றொரு வார வெளியீட்டை தாமே தயாரித்துப் பிரசுரித்தார்.

அவரது எழுத்து வன்மையை அவதானித்த 'லேக் ஹவுஸ்' நிறுவனம் அவரை அழைத்து உதவியாசிரியராக்கிக் கொண்டது.

இளமையும், துடிப்பும் தமிழ்த் தேசிய உணர்வும் கொண்ட சிவநாயகத்தை அடையாளம் கண்டார் தந்தை செல்வநாயகம். தமது தமிழரசுக் கட்சியின் வீச்சைப் பரப்புவதற்காகத் தாம் ஆரம்பித்த 'சுதந்திரன்' பத்திரிகைக்கு முதலாவது ஆசிரியர் பொறுப்பை இளைஞர் சிவநாயகத்திடம் வழங்கினார். முப்பதே வயதான இளைஞர் சிவநாயகம். சுதந்திரனை வைத்துக் கொண்டு செய்த கருத்துருவாக்கம் தமிழரசை இன்று வரை நிமிர்ந்து நிற்பதற்கான ஆளுமையைப் பெற்றுத் தந்தது.

சுதந்திரனில் அவரது கட்டுரைகளுக்காகவும், 'குயுக்தியார்' கேள்வி பதிலுக்காகவும் வாசகர் வாராந்தம் காத்திருந்தனர். தமிழர் தாயகம் எங்கும் தமிழரசுக் கட்சி ஆணித்தரமான அடித்தளத்தைப் பதிப்பதற்கு அத்திவாரம் இட்டுத் தந்தது எஸ்.டி.சிவநாயகத்தின் எழுத்து என்றால் அது மிகையாகாது. பத்திரிகைத் துறையில் சிவநாயகத்தின் தனித்துவமான எழுத்து வீச்சு, யுக்தி, திறமை எல்லாம் 'சுமந்திரன்' மூலம் வெளிப்பட்டன.

1956 ஜுன் 5 அன்று 'சிங்கள மட்டும்' சட்டத்திற்கு எதிராக கொழும்பு காலி முகத் திடலில் தமிழ்த் தலைவர்கள் போராட்டம் நடத்திய போது அதனை ஆர்வத்துடன் முன்னின்று படம் எடுத்துக் கொண்டிருந்த இளம் பத்திரிகையார் எஸ்.டி.எஸ்ஸை அருகில் இருந்த ஏரிக்குள் தூக்கி வீசினர் சிங்களக் குண்டர்கள். அங்கு நடந்தவற்றைத் தத்ரூபமாகப் பதிவு செய்தார் சிவநாயம்.

சிவநாயகத்தின் 'சுதந்திரன்' காலத்தில் அங்கு சிற்றூழியராக இணைந்த மட்டக்களப்பு இராஜதுரை பின்னாள்களில் தமிழ்த் தலைவர்களில் ஒருவராக உயர்வதற்கு சிவநாயகத்தின் நட்பும் வழிகாட்டலும் பரிவும் பின்னாளில் பேருதவியாக அமைந்தன.

தமிழரசின் இளம் தலைவர்களாக விளங்கிய அமிர்தலிங்கம் போன்றோரும் சிவநாயகத்தின் திறமை மற்றும் தந்தை செல்வா அவர் மீது கொண்டிருந்த பரிவு ஆகியவை கண்டு அவரை மதித்தனர். தமிழரசின் வளர்ச்சிக் காலத்தில் ஆளுமை மிக்க செல்வாக்குச் செலுத்திய சிவநாயகம் பின்னாள்களில் கருத்து முரண்பட்டார். தமிழரசை விமர்சிக்கும் பாதையை அவரது பேனா தேர்ந்தெடுத்தது.

1970 களில் 'சுதந்திரன்' பத்திரிகை 'சீல்' வைக்கப்பட்ட காலத்தை அடுத்து, அவரை வீரகேசரி பத்திரிகை தேடி அரவணைத்துக் கொண்டது. வெங்கட்ராமன், கேசவன், வாஸ் என்று மூத்த இந்திய வம்சாவளியினரைப் பத்திரிகை ஆசிரியர்களாகக் கொண்ட அந்த நாளிதழின் முதல் உள்நாட்டுத் தமிழரான ஆசிரியர் அவர்தான். அவரின் வருகைக்குப் பின்னர்தான் வீரகேசரியின் எழுத்து நடைப் போக்கே


எஸ்.டி. சிவநாயகம்

மாறியது என்பர் அவதானிகள். ஆசிரியபீடமே இளைஞர் கைகளுக்கு மாறியது. ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைத் துறைக்கென்று தனித்துவமான பாணியை - தண்டவாளத்தை - போட்டார் சிவநாயகம் ஐயா.

1966 இல் இண்டிபெண்டன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தில் இணைந்த எஸ்.டி.எஸ். சிவநாயகம் ஐயா, 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகைகளை ஸ்தாபித்தார்.

தமிழ் ஊடகத்துறைக்கு என்று தனித்துவமான சொல்லாட்சி நடைமுறை ஒன்றை உருவாக்கினார். தமிழ் ஊடகவியலாளர்கள் பலரை செதுக்கி சமூகத்துக்கு வழங்கினார்.

செய்தியாளர்களை மட்டுமல்ல, இலங்கை எங்கும் இலை மறை காயாக இருந்த எழுத்தாளர்களைத் தேடிக் கண்டுபிடித்து, புடமிட்டு தமிழ் எழுத்து துறைக்கு - இலக்கியத்துறைக்கு - கவிதைத்துறைக்கு - அர்ப்பணித்தவர் எஸ்.டி.எஸ்.

அவரால் உயர்த்தி விடப்பட்ட ஊடகவியலாளர் பலர் பத்திரிகை உலகின் சிகரத்தைத் தொட்டார்கள்.

கே.கே.இரத்தினசிங்கம், ம.வ. கானமயில்நாதன், சிவகுருநாதன், பத்மசீலன், செல்வராஜா, தாஜுதீன், பைரூஸ், இரத்தினம், ஜே.ரி. இராஜசிங்கம், வி.வரதசுந்தரம், சி.குருநாதன், சிவாஇராஜ ஜோதி, மாஸ்டர் சிவலிங்கம், ஜோசப் பரராஜசிங்கம் என்று அந்தப் பட்டியல் நீண்டது. அவர்கள் ஒவ்வொருவருமே பத்திரிகைத்துறையில் பெரும் சாதனையாளர்களாக உயர்ந்தனர்.

சிவநாயகம் ஐயாவிடம் நான் பெற்ற அனுபவங்கள் சக பத்திரிகையாளர்களுடன் பகிரக் கூடியவை. அவற்றை வரும் நாள்களில் பார்ப்போம்.

(வளரும்)

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 53



குமார் பொன்னம்பலம்

**160. அவர் (சிவநாயகம்) என்ன எழுதினார்?**

ஒடுக்கப்படும் தமிழ் மக்களை நியாயப்படுத்தி சில தலையங்கங்கள் உறுதியான நிலைப்பாட்டில் எழுதப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் நீலன் திருச்செல்வத்தின் கொலை பற்றி அசிரத்தையாக இருக்கிறார்கள் எனவும், எந்தக் குற்ற உணர்வுகளையும் வெளிப்படுத்தவில்லை என்றும் பல செல்வாக்குள்ள அமைப்புக்கள் குற்றம் சுமத்துகிறார்கள். உங்கள் சஞ்சிகையில் ஓகஸ்ட் – செப்ரெம்பர் 1999 வெளிவந்த தலையங்கம் அவற்றை எல்லாம் விளாசித்தள்ளும் வலுவான, தைரியமான ஆக்கம். தமிழ் மக்களை அடிமைப்படுத்தி, அவர்களின் மனித உரிமைகளை காலம் காலமாக மீறி, அவர்களுக்கு அவசர தேவையான மருந்து, உணவு எல்லாம் மறுக்கப்பட்டு, தேவையற்ற – சட்டத்திற்குட்படாத கைதுகள், துன்புறுத்தல்கள். கற்பழிப்புகள், காணாமல் ஆக்கப்படுதல் எல்லாவற்றையும் நாங்கள் பட்டியலிட்டு இந்த அமைப்புக்கள் முன்வைத்திருக்கிறோம். ஶ்ரீலங்கா அரசு பாரதூரமான குற்றங்களைத் தமிழ் மக்களுக்கு எதிராக செய்துள்ளது என்பது புரியாததல்ல. அப்படியான ஒரு நாட்டிற்கே நீலன் ஓர் அடிமையாக அவர்களுடன் சேர்ந்து, இணங்கி, தமிழ் மக்களின் நேர்மையான ஜனநாயக முறையான அவர்களது எதிர்பார்ப்புக்களை மண்கவ்வ உழைக்கிறார். அவற்றை முன்னெடுக்கும் போது தனது நிகழ்ச்சிநிரல் என்னவென்று அவர் தமிழ் மக்களோடு பகிர்ந்து அவர்களுக்கு விளங்கப்படுத்தியது கிடையாது. நீலனது நடவடிக்கைகள் சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகள் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை வெட்டுவதுதான் (Subvert). இவற்றை முன்னெச்சரிக்கையாக புலிகள் அறிந்து, புலம்பெயரிலுள்ள சக்திகளை ஒன்று திரட்டி, இப்படி எறியப்பட்ட சேறுகளை அகற்ற பாடுபட வேண்டும். படிப்படியாக வளர்ந்து ஒரு மந்தமான இருண்ட மனக்கணிப்பு சர்வதேசத்தில் எழுவது தமிழர்களின் அபிலாஷைகளுக்கு நல்லதல்ல. புலம்பெயர் தமிழ் மக்களிடையே இப்படியான பொய்ப் பிரச்சாரங்களை எப்படி உறுதியாக கையாண்டு சர்வதேசத்தை நம்பக்கம் திருப்புவது என்ற விரக்தி வளர்ந்தது வருகிறது. அந்த விரக்தி நிலையில் Hot Spring உங்களது முகப்பு அட்டை, அதற்கான தலைப்பு, ஆசிரியர் தலையங்கம் எல்லாம் ஒன்று சேர்ந்து சரித்திரம் படைக்கும் அமைப்பு. சிவநாயகம் நீங்கள் அவற்றை அபாரமாக செய்துள்ளீர்கள்.”

இவற்றை இன்று வாசிப்பவர்கள் அவற்றை மீளசைவு போடலாம். ஜெயவர்த்தன ஆட்சியில் அவசியமான மருந்துகள், அத்தியாவசியமான உணவுப் பொருள்கள், எரிபொருள் என்பன தடை செய்யப்பட்ட போது இந்தியா அவற்றை வானிலிருந்து வீசி, வடமராட்சி நடவடிக்கைகளை இனப்படுகொலையாக கருதி எடுத்து ஒப்பந்தத்தை உருவாக்கியது. இங்கு சந்திரிக்காவின் அதே நடவடிக்கைகளில் இந்தியா அக்கறை காட்டவில்லை. ஏனெனில் பிரபாகரன் சர்வதேச சமூகத்துக்கும் ஐ.நாவுக்கும் இந்தியா தங்களது உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிட்டு குழப்புகிறது. அவர்களை விலத்தி இருக்க கோருங்கள் என்று கேட்டிருந்தார். மற்றது – சர்வதேசம் மதில் மேல் நின்றது. ஆனால் சந்திரிகாவை ஒரு சர்வதேச மத்தியத்திற்கு தூண்டிக் கொண்டிருந்தது. பின்னர் நோர்வேயின் எரிக் சொல்ஹெய்ம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட போது அவர் மதியுரைகள் பாலசிங்கத்திடம் நீலன் யாரால், ஏன் கொல்லப்பட்டார் என்று சர்வதேசம் தெரிந்து கொள்ள வேண்டுகிறது எனக்கேட்டார். தனக்கேற்பட்ட சங்கடங்களுக்கு இடையிலும் அவரை விடுதலைப் புலிகள்தான் கொன்றார்கள் என்றும், பல முறை இவற்றிலிருந்து விலகுமாறு அறிவுறுத்தியும் அவர் கேட்காததால் அவர் கொல்லப்பட்டார் என்றும் அறிவித்தார்.

**161. நீலன் திருச்செல்வத்தின் கொலை அவ்வளவு தாக்கங்கள் ஏற்படுத்தினவா?**

தாக்கங்கள் ஆழமானவை. விடுதலைப் புலிகளை சர்வதேச நாடுகள் அந்நியப்படுத்தின. அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்ற அரசியல் தலைவர்களின் கொலைகளால் இந்தியாவில் தாக்கங்கள் இருந்தன. அதே நேரம் அமெரிக்காவும் அதன் வட்ட நாடுகளும் இந்தியாவின் நேச நாடுகளாக இயங்கவில்லை. அவை சிறிலங்காவை தங்கள் நலன்களுக்கு உடந்தையாக்குவதிலே கண்ணாயிருந்தன. ஆனால் நீலனோ சர்வதேசத்தில் அவருக்காக அறியப்பட்டவர். அவருடைய கொலைக்கும் அவர் இளவயதில் அழிக்கப்பட்டதுக்கும் கண்டனங்கள் சர்வதேசத்தின் பல தலைவர்களிடமிருந்தும் வந்தன. அமெரிக்க ஜனாதிபதி கிளிங்டன் ஐ.நா. காரியதரிசி கோபி அனான் அவருடன் ஹவார்ட்டில் படித்த கனடாவின் பிரதமர் ஜூன் சிறிட்டியன் எனப் பலர். ஆனால் அந்த அனுதாபங்களை விடுதலைப் புலிகள் கையாண்ட விதம் அவர்களின் அணுகுமுறைகளை அவதானிக்க தூண்டியது. அவற்றில் ஐ.நா. மனித உரிமை ஆணையமே அவரது மறைவிற்கு அனுதாபம் தெரிவித்து அவரது பெயரில் மனித உரிமை காப்பாளர்களை கொன்றதற்கான கண்டனத்துடன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. குமார் பொன்னம்பலம் நீலனுக்காக சர்வதேசத்திலிருந்து வரும் கண்ணீரெல்லாம் – முக்கியமாக அமெரிக்காவிடமிருந்து வருபவை – அவர் ஒரு சி.ஐ.ஏயின் உளவாளி என்பதால் வருகின்றதென்றார். அவர்களுக்கான நியாயங்களை செய்யும் புத்திஜீவி ஒருவர் – வழமையாக ஜப்பானிலிருந்து பரப்புரை செய்யும் புத்திஜீவி ஒருவர் – குமார் பொன்னம்பலத்தை ஆமோதித்து, கோபி அனான் போன்றோருக்கெல்லாம் சி.ஐ.ஏ யின் நிழல்கள் உண்டு, நீலன் அவர்களின் உளவாளி, இதனால் அவர் விடுதலைப் புலிகளை பயங்கரவாத பட்டியலில் இடுவதற்கு முன்னெடுப்புக்கள் செய்தார் என்று நியாயப்படுத்தினார்.

குமார் பொன்னம்பலத்தோடு நெருக்கமாக ஜெனிவாவிலும் அதற்கு வெளியிலும் ஆதரவாக வேலை செய்த ஒரு நண்பர் குமார்பொன்னம்பலத்தின் கெட்டித்தனமான பதில்கள் பற்றி எனக்கு சொல்லும் போது ஜெனிவாவில் பரப்புரை கூட்டங்கள் நடக்கும் போது தவறாமல் தற்போதைய அமைச்சர் சரத் வீரசேகர அவற்றிற்கு போவது வழக்கமாம். அப்படியான ஒரு கூட்டத்தில் அவரின் தூண்டுதலில் கம்பொடிய மனித உரிமை ஆர்வலரான ஒரு பெண் குமாரிடம் யார் ரஜனி திரணகமாவை கொன்றது, அவர் ஏன் கொல்லப்பட்டார் என கேட்கவே அதற்கு குமார் ‘நான் அதை கேட்டுக் கொண்டு திரிகிறேன். சில சமயம் உங்களிடம் இந்தக் கேள்வியைத் தந்தவரிடம் பதிலிருக்கும். அவர் சொன்னால் எனக்கு சொல்லுங்கோ!’ எனக் கேள்வியையே கேள்வியாக்கினாராம்.

இப்படியான கெட்டித்தனமான நியாயங்கள் நீலன் திருச்செல்வத்தை ஒட்டி சர்வதேசத்தில் விலை போகவில்லை. அத்தோடு சந்திரிகா மீதான கொலை முயற்சி என்பதுவும் முக்கியத்துவம் பெற்றது. ஶ்ரீலங்காவில் தேர்தல் காலங்களில் எத்தனை கொலைகள், நாடாளுமன்ற அங்கத்தினர்கள், போட்டியிடுவோர் என நடக்கின்றன? அந்த வருடமே 13இற்கு மேற்பட்ட பிரமுகர்கள் கொல்லப்பட்டனர். அப்படியிருக்கும் போது இது பெரிதாக பொருட்படுத்தப்பட வேண்டும் என்று பல மட்டங்களில் அவிழ்த்துவிடப்பட்டன. இப்படியான அணுகுமுறைகளும் அவற்றை மதியுரைஞர் பாலசிங்கம் ஏற்ற காரணங்களும் விடுதலைப் புலிகளுக்கு சர்வதேசத்தில் பலத்த பின் வாங்கலைத் தந்தன.



நீலன் திருச்செல்வம்

(வளரும்)

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 9** | **கணிதம்** | **அலகு 13**


## மட்டந்தட்டலும் விஞ்ஞான முறைக் குறிப்பீடும்

**அறிமுகம்**




* டைனோசர்கள் 140 000 000 ஆண்டுகளுக்கு முன்னர் புவியில் வாழ்ந்ததாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

* ஐதரசன் அணுவின் அணுவாரை 0.000000000053 m ஆகும்.



**சூரியனிலிருந்து ஒளிக்கதிர் புவியை அடைய எடுக்கும் காலத்தைக் காண்போம்.**



* சூரியனிலிருந்து புவிக்கு உள்ள தூரம் ஏறக்குறைய 149600000000m ஆகும்.

* ஒளியின் வேகம் செக்கனுக்கு 29979000m ஆகும்.

காலம் = 149600000000 ÷ 2997900 செக்கன்கள் ஆகும்.

* இவ் எண்களை இலகுவான முறையில் எழுதுவதற்கும் கணித்தல்களை இலகுவாக்குவதற்கும் **மட்டந்தட்டல், விஞ்ஞான முறைக்குறிப்பீட்டு** முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**விஞ்ஞான முறைக்குறிப்பீடு**

1ம் 1 இலும் கூடிய எண்களை விஞ்ஞானமுறைக் குறியீட்டில் எழுதுதல்

| | | |
|---|---|---|
| $65000 \times 10$ | = | $65000 \times 10^1$ |
| $6500 \times 100$ | = | $6500 \times 10^2$ |
| $650 \times 1000$ | = | $650 \times 10^3$ |
| $65 \times 10000$ | = | $65 \times 10^4$ |
| $6.5 \times 100000$ | = | $6.5 \times 10^5$ |
| $0.65 \times 1000000$ | = | $0.65 \times 10^6$ |

1 இலிருந்து 10 இற்கு இடைப்பட்ட எண் ஒன்றினதும் 10 இன் வலுவினதும் பெருக்கமாகக் காண்பிக்கும் முறை விஞ்ஞானமுறைக் குறிப்பீடு எனப்படும்.

01 அல்லது 1 இற்கும் 10 இற்கும் இடைப்பட்ட ஓர் எண் → $6.5 \times 10^5$ → 10இன் வலு

**உதாரணம் -**

| | | | | |
|---|---|---|---|---|
| 4850000 | = | $4.85 \times 1000000$ | = | $4.85 \times 10^6$ |
| 712.3 | = | $7.123 \times 100$ | = | $7.123 \times 10^2$ |
| 6000 | = | $6.0 \times 1000$ | = | $6.0 \times 10^3$ |

**பயிற்சி**

1. 60500 = ..........
2. 314500000 = ..........
3. 74300 = ..........
4. 5290 = ..........
5. 200 = ..........
6. 4340000 = ..........
7. 581200 = ..........
8. 1010 = ..........
9. 254 = ..........
10. 13000000000 = ..........
11. 18.4 = ..........
12. 7.34 = ..........
13. 715.8 = ..........
14. 61.8 = ..........
15. 7.65 = ..........

**0 இற்கும் 1 இற்கும் இடைப்பட்ட எண்களை விஞ்ஞானமுறைக் குறிப்பீட்டில் எழுதுதல்**

**உதாரணம்**

$0.0845 = 8.45 \times \frac{1}{100} = 8.45 \times 10^{-2}$

**பயிற்சி**

- $0.867 = 8.67 \times \frac{1}{10} =$ ..........
- $0.000618 = 6.18 \times \frac{1}{10000} =$ ..........
- $0.0021 = 2.1 \times \frac{1}{1000} =$ ..........
- $0.000007 =$ .......... $= 7 \times 10^{-6}$
- 0.00096 = .......... = ..........
- 0.041 = .......... = ..........
- 0.0049 = .......... = ..........
- 0.000135 = .......... = ..........
- 0.000005 = .......... = ..........
- 0.111345 = .......... = ..........

**விஞ்ஞானமுறைக் குறிப்பீட்டில் உள்ள எண்களைச் சாதாரண வடிவில் எழுதுதல்**

உதாரணம் - $2.35 \times 10^5 = 2.35 \times 100000 = 235000$

$1.6 \times 10^{-3} = 1.6 \times \frac{1}{10^3} = 1.6 \times \frac{1}{1000} = 0.0016$

**பயிற்சி**

1. $4.3 \times 10^4$ = ..........
2. $7.85 \times 10^3$ = ..........
3. $1.854 \times 10^2$ = ..........
4. $2.61 \times 10^7$ = ..........
5. $9.008 \times 10^3$ = ..........
6. $1.4 \times 10^{-2}$ = ..........
7. $3.85 \times 10^{-3}$ = ..........
8. $2.065 \times 10^{-1}$ = ..........
9. $6.7 \times 10^{-4}$ = ..........
10. $4.25 \times 10^{-5}$ = ..........

**எண்களை மட்டந்தட்டல்**

**கிட்டிய 10,100,1000 இற்கு மட்டந்தட்டல்**

6748 1. கிட்டியஇற்கு 10 இற்கு = 6750

(6748 இவ் எண்ணின் இறுதி இலக்கம் 5 உம் 5 இலும் அதிகமாயின் அதன் பத்தாமிடத்து இலக்கம் 1 இனால் அதிகரித்து இறுதி இலக்கம் 0 இடப்படும். குறைவாயின் பத்தாமிடத்து இலக்கம் மாற்றமடையாது இறுதியிலக்கம் பூச்சியம் இடப்படும்.

2. கிட்டியஇற்கு 100 இற்கு = 6700

(6748 இதன் இறுதி இரு இலக்கங்களும் 50 உம் 50 இலும் அதிகமாயின் அதன் நூறாமிடத்து இலக்கம் 1 இனால் அதிகரித்து இறுதி இரு இலக்கம் 0 இடப்படும். குறைவாயின் நூறாமிடத்து இலக்கம் மாற்றம் ஏற்படாது. இறுதி இரு இலக்கமும் 0 இடப்படும்)

3. கிட்டியஇற்கு 1000 இற்கு = 7000

(6748 இதன் இறுதி மூன்று இலக்கங்களும் 500 உம் 500 இலும் அதிகமாயின் ஆயிரமாமிடத்து இலக்கம் 1 இனால் அதிகரித்து இறுதி மூன்று இலக்கங்களும் 0 இடப்படும். குறைவாயின் ஆயிரமாமிடத்து இலக்கத்தில் மாற்றம் ஏற்படாது. இறுதி மூன்று இலக்கங்களும் 0 இடப்படும்.)

**பயிற்சி - 01**

| எண்கள் | கிட்டிய 10 இற்கு மட்டந்தட்டுக | கிட்டிய 100 இற்கு மட்டந்தட்டுக | கிட்டிய 1000 இற்கு மட்டந்தட்டுக |
|---|---|---|---|
| 18196 | | | |
| 1785 | | | |
| 106810 | | | |
| 39672 | | | |
| 18078 | | | |
| 30769 | | | |

(09 ஆம் பக்கம் பார்க்க)

ஆக்கம் :- தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை) யா/ செங்குந்த இந்துக் கல்லூரி

வழிகாட்டலும் ஆலோசனையும் :- திரு ஞானமணி இரத்தினசிங்கம் (ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா/ தேசிய கல்வியியற் கல்லூரி

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 9 | கணிதம் | அலகு 13

## மட்டந்தட்டலும் விஞ்ஞான முறைக் குறிப்பீடும்

08ஆம் பக்கத் தொடர்ச்சி

**02.** ஓர் எண்ணை கிட்டிய 100 இற்கு மட்டம் தட்டும் போது 9600 எனப் பெறப்பட்டது. அவ் எண்ணாக இருக்கத்தக்க,

1) மிகச்சிறிய முழுவெண் யாது? ........................

2) மிகப்பெரிய முழுவெண் யாது? ........................

**தசம எண்களை மட்டந்தட்டல்**

**உதாரணம்**

67.817

1. 1ஆம் தசமதானத்திற்கு இற்கு மட்டந்தட்டுக = 67.8
2. 2ஆம் தசமதானத்திற் இற்கு மட்டந்தட்டுக = 67.82
3. கிட்டிய முழுவெண்ணுக்கு மட்டந்தட்டுக = 68

**பயிற்சி**

01. தரப்பட்ட எண்களை கிட்டிய முதலாம் தசம தானத்திற்கு மட்டந்தட்டுக.

1. 16.86 = ..............................
2. 137.61 = ..............................
3. 748.69 = ..............................
4. 110.96 = ..............................
5. 6.748 = ..............................

| எண்கள் | 1ஆம் தசமதானம் | 2ஆம் தசமதானம் | கிட்டிய முழுவெண் |
|---|---|---|---|
| 9.874 | | | |
| 10.169 | | | |
| 315.765 | | | |
| 70.916 | | | |
| 1.894 | | | |
| 32.123 | | | |
| 123.436 | | | |
| 21.604 | | | |
| 13.821 | | | |

**ஆக்கம் :- தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை) யா/ செங்குந்த இந்துக் கல்லூரி**

**வழிகாட்டலும் ஆலோசனையும் :- திரு ஞானமணி இரத்தினசிங்கம் (ஓய்வுநிலை விரிவுரையாளர்) யா/ தேசிய கல்வியியற் கல்லூரி**

**இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.**

# மருதமுனையில் கொவிட் தீவிரம்

## கல்முனை மாநகர முதல்வர் தெரிவிப்பு

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மருதமுனை பிரதேசத்தில் கொவிட் தொற்று தீவிரமடைந்திருப்பதால், நேற்று (வியாழக்கிழமை) தொடக்கம் ஒரு வார காலத்துக்கு அப்பிரதேசத்தில் ஆள் நடமாட்டத்தை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலில் மேலும் கூறியிருப்பவை வருமாறு -

கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சுகாதாரத்துறையினரதும் மருதமுனை பள்ளிவாசல்கள் சம்மேளனம், உலமா சபை மற்றும் வர்த்தகர் சங்கத்தினரதும் பங்கேற்புடன் கல்முனை மாநகர முதல்வர் செயலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போது மருதமுனையில் தீவிரமடைந்துள்ள கொவிட் தொற்று நிலைமை குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறையினரால் சிவப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ள மருதமுனைப் பிரதேசத்தில் பரவும் கொவிட் வைரஸ் திரிவடைந்த, வீரியம் கூடிய வைரஸாக இருக்கக்கூடும் என சுகாதாரத் துறையினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் இப்பிரதேசத்தில் கொவிட் தொற்றாளர்களின் இறப்பு வீதம் அதிகமாக இருப்பதாகவும் சுகாதாரத்துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவற்றைக் கருத்தில் கொண்டு இப்பிரதேசத்தில் உடனடியாகக் கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, சுகாதார அமைச்சால் 2020/03/25ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 2168/6ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மற்றும் 2020/10/15ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 2197/25 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் 91ஆம் ஒழுங்கு விதி ஆகியவற்றின் பிரகாரம் மாநகர முதல்வராகிய என் மீது உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், மருதமுனை வீ.சி. வீதி தொடக்கம் செட்டியார் வீதி வரையான முழுப்பிரதேசத்திலும் ஆள் நடமாட்டத்தை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்கான உத்தரவு விடுக்கப்படுகிறது.

இந்தக் கட்டுப்பாடு நேற்று இரவு 10 மணி தொடக்கம் 2021/07/07ஆம் திகதி காலை 6 மணி வரை அமுலில் இருக்கும். இக்காலப்பகுதியில் பிரதான வீதி ஊடான போக்கு வரத்துகளைத் தவிர உள் வீதிகளில் எவரும் நடமாட முடியாது. அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடுவோர் தவிர எவரும் வீட்டி லிருந்து வெளியேற முடியாது.

மருந்தகங்கள் தவிர்ந்த கடைகள் எதுவும் திறக்கப்பட மாட்டா என அறியத்தரப்படுகிறது. ஆகையினால், உங்களையும் உங்களது குடும்பத்தினரையும் ஆட்கொல்லி நோயான கொவிட் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக வீட்டிலிருந்து கொள்ளுங்கள்.

மருதமுனைப் பிரதேசத்தில் கொவிட் வைரஸ் தொற்றுப் பரவலை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரத்துறை, பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குமாறு அன்பாய் வேண்டிக்கொள்கின்றேன் என முதல்வர் ஏ.எம்.றகீப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# இலங்கைக்கு எந்தக் கோரிக்கையும் இந்திய அரசாங்கம் விடுக்கவில்லை!

## அந்நாட்டு உயர் தூதரகம் தெரிவிப்பு

இலங்கையின் வான்வெளியை மூன்றாம் நாட்டுடனான கூட்டு இராணுவப் பயிற்சிக்கு பயன்படுத்துவதற்கான இந்தியாவின் கோரிக்கையை இலங்கை அதிகாரிகள் மறுத்துவிட்டனர் என வெளியான ஊடக அறிக்கைகளை இந்திய உயர் தூதரகம் மறுத்துள்ளது.

இந்த தகவல் உண்மையில் தவறானவை என்று உயர் தூதரகம் அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

மூன்றாம் நாட்டுடன் எந்தவொரு கூட்டுப் பயிற்சியின் நோக்கத்துக்காக அண்மைக் காலங்களில் இலங்கை வான்வெளியைப் பயன்படுத்த இந்தியா கோரிக்கை விடுக்கவில்லை என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'வட்ஸ் அப்' இற்கு நிகரான செயலியை உருவாக்கிய 15 வயதான யாழ்.மாணவன்



வட்ஸ் அப்பிற்கு நிகரான எம்.எஸ்.குயேட் எனும் புதிய செயலியை உருவாக்கி யாழ். மாணவன் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

குறித்த மாணவன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 10 இல் கல்வி பயிலும், இணுவிலில் வசிக்கும் நக்கீரன் மகிழினியன் என்பவராவார்.

மேற்படி மாணவன் கடந்த பயணத்தடையின் போது வீட்டிலிருந்த காலப்பகுதியை குறித்த முயற்சிக்குப் பயன்படுத்தினார் எனவும் தனக்கு இந்த முயற்சி வெற்றியளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இலங்கைக்கு பிரவேசிக்க தடை நீக்கம்

மத்திய கிழக்கின் ஆறு நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் பயணிகளுக்கு தற்காலிகமாக விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த தடை நிபந்தனைகளுடன் நீக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளார்.

அதற்கமைய கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், சவுதி அரேபியா, ஓமான், பஹ்ரைன் மற்றும் குவைத் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தரும் பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு மற்றும் கொவிட் – 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் ஆகியவற்றின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நாடுகளுக்கு கடந்த 14 நாள்களுக்குள் சென்றவர்களுக்கு நாட்டுக்குள் பிரவேசிக்கத் தடை விதிக்கப்பட்டிருந்ததாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை அறிவித்தது.

அதன்படி, எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் 13ஆம் திகதி வரை இந்தத் தடை அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட நாடுகளில் இருந்து நாட்டுக்கு வந்தவர்களில் 100 இற்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டதால், இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

16


- வே.வரதசுந்தரம் -

**சிரத்திலே பாற்குடம்**
**கரத்திலே வேப்பிலை**
**மனத்திலே நீயுமுண்டு**
**ஆச்சிநீ காளி!**


**தமிழச் சாதி**
**தலைநிமிர்ந்து வாழத்**
**தலைசாய்த்துத் தொழுதோம்**
**ஆச்சிநீ காளி!**

திருகோணமலைப் பத்திரகாளி அம்பாள் கோயிலில் பக்திபூர்வமாக நடைபெறும் அருள்பொழியும் விழாக்களில் வளம் பல நல்கும் வைகாசிப் பொங்கலும் ஒன்றாகும்.

நிலாவெளி மண்ணின் மைந்தன் கெஜரெத்தினம் தருமகுலராசா அவர்கள் ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற பதிவாளர். ஈழத்து எழுத்துத் துறையில் கவிஞர், கதை சொல்லி, நாவலாசிரியர் என்று முத்திரை பதித்து திருகோணமலைக்குப் புகழ்சேர்த்தவர். ஏறத்தாழ நாற்பது வருடங்களாக எங்கள் குடும்பத்துடன் பழகும் இனியவர்.

அன்னார் தனக்கேயுரிய இனிய நடையில் வைகாசிப் பொங்கல் நன்னாளில் தமது குடும்பத்துக்கு கோணமலை காளியாச்சி நல்கிய அருளை, அற்புதத்தை எம்முடன் பகிர்ந்து கொள்கின்றார். சுவையுங்கள்:

'எனது மனைவியை முதலாவது மகப்பேற்றுக்காக திருகோணமலை மருத்துவமனையில் அனுமதித்து மூன்று நாள்கள் கடந்தும், பிரசவ வேதனை அதிகரித்துக் கொண்டு போனதே தவிர பிரசவம் நடைபெறவில்லை. அதன் காரணமாக சத்திரசிகிச்சை செய்ய வேண்டுமென்ற முடிவுக்கு வந்த மருத்துவர்கள் 1979 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி மாலை மூன்று மணியளவில் அம்புலன்ஸ் மூலம் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அவரை அனுப்பிவைத்தனர்.


சிவகாமி அம்மா

அம்புலன்ஸில் என்னை ஏற்றிச்செல்ல மறுத்து விட்டனர்.

மறுநாள் காலையில்தான் திருகோணமலையில் இருந்து அநுராதபுரத்துக்கு பேருந்து. என்ன செய்வதென்று தெரியாது மனஞ்சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்த வேளை, எமது குடும்ப ஆலோசகராகவும், அன்பராகவும் திகழ்ந்துவந்த மதிப்புக்குரிய சிவசுப்பிரமணியம் ஐயா அவர்களின் திருவுருவம் மனதில் தோன்ற, திருகோணமலை அருணகிரி வீதியில் அமைந்திருந்த அவர் இல்லத்துக்குச் சென்றேன்.

ஐயாவைக் கண்டு அவரிடம் விடயத்தைக் கூறிய போது, அங்கு நின்றிருந்த அவரின் அக்காவான போற்றுதலுக்குரிய சிவகாமியம்மா கூறினார்:

'மகனே கவலைப்படாதே. இன்று பத்திரகாளி அம்பாளின் பொங்கல். இங்கே பானை ஏற, அங்கே குழந்தை சுகமாகப் பிறக்கும்.'

அந்த வாக்கைக் கேட்டதுமே, சஞ்சலமும், கவலையும் வேதனை தந்த எந்தன் மனதில் அம்பாளே கூறிய அருள்வாக்குப் போல சாந்தியும், திடசங்கற்பமும் ஏற்பட்டன.

உடனேயே ஆறு மைல்களுக்கு அப்பாலுள்ள எனது சொந்த ஊரான நிலாவெளிக்குச் சென்று, மாற்றுடைகள் எடுத்துக்கொண்டு, எனது மனைவியின் தாயாரையும், தம்பியையும் அழைத்துக்கொண்டு, அன்றிரவு சிவகாமியம்மாவின் வீட்டிலேயே தங்கி நின்று, மறுநாள் காலை முதல் பஸ்ஸில் அநுராதபுரம் பயணித்து, வைத்தியசாலை சென்றடைந்தோம். ஆயினும், மதியம் பன்னிரண்டு மணிக்குத்தான் பிரசவ விடுதிக்குச் செல்ல அனுமதித்தனர்.

என்னவாயிற்றோ என்ற ஏக்கத்துடன் உள்ளே சென்ற எமக்கு ஆறுதல் ஏற்பட்டது. அங்கே கட்டிலருகே என்மனைவி புன்னகை பூத்தவாறு நின்று கொண்டிருந்தாள். எனக்கு ஒரே ஆச்சரியம்.

'பிரசவ வலியால் துடித்துக் கொண்டிருந்தவள், சத்திர சிகிச்சைதான் ஒரேவழி என்று மருத்துவர்கள் முடிவெடுத்து அம்புலன்ஸ் வண்டியில் அவசர அவசரமாக இங்கு அனுப்பிவைக்கப்பட்டவள், எவ்வாறு இவ்வளவு சீக்கிரம் சுகமாகி, எழுந்து கட்டிலருகே நிற்கின்றாள்' - இப்படி வியந்து நின்றேன். மனைவியின் கட்டிலில் அழகான, புத்தம் புதிய மலராக ஆண் குழந்தை ஒன்று. மனைவியின் முகத்தில் தாய்மையின் பூரணமான ஒளி வீசியது. அவள் கூறினாள்:

'நேற்றிரவு சுகமாகப் பிறந்திட்டான். சத்திரசிகிச்சை செய்யவேண்டுமென்று இரவு ஏழுமணிபோல் சத்திர சிகிச்சை கூடத்துக்கு என்னைக் கொண்டு போனார்கள். மருத்துவர் வயிற்றை அழுத்திப் பார்த்துவிட்டு, அதனைச் சரிசெய்தார். சிறிது நேரத்தில் மயக்கம் வருவதுபோல் இருந்தது. வெள்ளைச் சீலையுடன் யாரோ நடமாடுவதுபோல் தோன்றியது. கண்விழித்துப் பார்த்தபோது இதே கட்டிலில் கிடந்தேன்.'

சிவகாமியம்மா சொன்ன அந்த அருள்வாக்கு ஞாபகத்துக்கு வந்தது. 'இங்கே காளியாச்சிக்குப் பொங்கல் ஏற, அங்கே குழந்தை சுகமாகப் பிறக்கும்.' சிவகாமியம்மா வாய்மொழிந்த அருள்வாக்கு நிறைவேறியதை எண்ணியெண்ணி மெய்சிலிர்த்து, விதிர்விதிர்த்து, அதனை எந்தன் துணைவியிடம் கூறிஆனந்தக்கண்ணீர் உகுத்தேன். அன்றுமாலையே அங்கிருந்து புறப்பட்டு, சுகமாக எமதில்லம் திரும்பினோம்.

அபிராமிப்பட்டரின் 'அமாவாசையன்று பௌர்ணமிவரும்' என்ற வாக்கைக் காப்பாற்ற ஆதிபராசக்தியே தனது தடாங்கத்தை வானில் வீசி நிலவைத் தோற்றுவித்தமை போல், சிவகாமியம்மாவின் வாக்கைக் காப்பாற்ற பத்திரகாளி அம்பாள்தான் சுகப்பிரசவத்தை ஏற்படுத்தி இருக்கிறார் என்றெண்ணி மெய்மறந்து மனதார சிவகாமியம்மாவையும், பத்திரகாளி அம்பாளையும் துதித்தோம்.

அதனைத் தொடர்ந்து, இற்றை நாள் வரை பத்திரகாளி அம்பாள் ஆலயத்து வைகாசிப் பொங்கலில் கலந்துகொண்டு ஆண்டுகள் பல கடந்தும், எமது மகனைக் காணுந்தோறும், எப்போதுமே சிவகாமியம்மாவின் பசுமையான நினைவுகளுடன் வாழுகின்றோம். - என்றார் அவர்.


காளியாச்சி அருள் துய்த்த
தருமகுலராசா - செல்வநாச்சியார் தம்பதியர்


**கல்லா தவருங் கரங்கூப்பி உள்ளங் கசிந்துருகிப்**
**பல்லாயிரங்கோடி நாமங்கள் கூறிப் பரிந்தழைத்தால்**
**நில்லாள் கருணைப் பெருமாட்டி முன்வந்து**
**நின்றிடுவாள்**
**வல்லாள் அபிராமி காமாட்சி பத்திர காளிகையே!**
**கழகப் புலவர் பெ.பொ.சிவசேகரனார்**

தொடரும்....

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவுக்கு எதிரான போராட்டம்

## ஓர் அனுபவத் தொடர்



எந்திரி நவரட்னம் சுதாகரன்
பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர்,
முல்லைத்தீவு பிராந்தியம்.

அங்கம் 14

**அவதானிப்பு 5 :**

**குறைபாடுகள் -ஆசோசனை வழங்குதல்**

இங்கு நான் குறிப்பிட விரும்புவது சிகிச்சை நிலையத்தினுள் வந்ததும் எல்லோருக்கும் இருட்டறைக்குள் இருப்பது போன்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது. வைத்தியர்கள் போதியளவு அறிவுறுத்தல்களினை வழங்கியிருந்தாலும் அவை சரியான கட்டமைப்புக்குள் இல்லாத நிலையில் காணப்படுகின்றன. அது பாரிய ஒரு குறைபாடாகவே இருக்கிறது. என்ன செய்ய வேண்டும், அடுத்து என்ன செய்ய வேண்டுமென்ற நிலை முழுமையாக அன்றி சாதாரண இயக்கத்தில் அவதானிப்புகளூடாக தெரிந்து கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. அறிவுறுத்தல்கள் சரியான முறையில் கிரமமாக வழங்கப்படவில்லை என்பதையே இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

**பரிந்துரைகள்**

இந்நோய் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடியதான செய்திகளை நோயாளிகளுக்கு வழங்குவது ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தும். ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளைப் பொறிமுறையாகக் கட்டமைப்புக்குட்படுத்தி சரியான வளங்களைத் தேர்ந்தெடுத்து ஒலிப்பதிவு செய்து அறிவிப்பு செய்யும் வகையில் ஒழுங்கு செய்தால் இது தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதோடு நடைமுறைகளை கைக்கொள்ளவும் இலகுவானதாக இருப்பதோடு நிச்சயமாக வெற்றிக்கான வழியாகவும் அமையும். இங்கிருப்பவர்கள் பெரும்பான்மையானோர் வாசித்து விளங்கக்கூடியவர்களாகவே இருக்கிறார்கள். அதற்கேற்றால் போல் வழிகாட்டல்கள் (Guidelines) வைத்தியக் குறிப்புக்களை அச்சடித்த தாள்களாக கொடுப்பதனூடாக அல்லது அவர்களுக்கு சேரக் கூடிய வகையில் காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதனூடாக முழுமையான பலனை எதிர்கொள்ளாவிடினும் தங்களுக்குத் தேவையான மேலதிக விளக்கங்களையும் தெளிவினையும் பெற்றுக்கொண்டு ஓரளவேனும் சிறப்பாக செயற்படுவார்கள் என நம்புகின்றேன். இதனை விட தாங்கள் ஏற்கனவே positive நோயாளிகளாக இருப்பதனால் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல் தொடர்பான நடைமுறைகள் தேவையில்லை எனும் கருத்தினைக் கொண்டு சிகிச்சை நிலையத்தினுள் நோயாளிகள் செயற்படுகிறார்கள். இதன் அவசியத்தன்மை குறித்தும் இங்குள்ள நோயாளிகளுக்கு முறையான அறிவுறுத்தல் வழங்கப்பட்டு இந்நடைமுறைகளினைக் கடைப்பிடிக்க வழிவகை செய்தல் வேண்டும்.

**அவதானிப்பு 6 :**

**குறைபாடுகள் - ஒன்றாக இருத்தல்**

அதாவது PCR எடுத்த பிற்பாடே நோயாளிகள் இங்கு சிகிச்சைக்காக வருகிறார்கள். அதிலும் குறிப்பாக PCR முடிவு கிடைக்கப்பெறும் காலத்தை பொறுத்தே அவர்களது சிகிச்சைக்கான காலம் தீர்மானிக்கப்படுகிறது. இங்கு வரும் நோயாளிகளது சிகிச்சை காலம் பலவாறாக அமையும். ஓரிரு நாள்கள், 03 நாள்கள், 04 நாள்கள் அல்லது 09 நாள்களாக கூட அமையலாம். இங்கு தங்கியிருக்கும் நோயாளிகளில் ஒரு நாளில் வெளியேறும் நோயாளியும் 07 அல்லது 08 நாள்களின் பின் வெளியேறும் நோயாளியும் ஒன்றாகவே தங்கவைக்கப்படுகிறார்கள். இந்நிலை ஆரோக்கியமான செயற்பாடாக நான் கருதவில்லை.

விஞ்ஞான ரீதியாக இதன் சாதக பாதக நிலையினை நான் அறியவில்லை . அனைவரும் positive நோயாளிகளாக இருந்தாலும் இந்நிலை மனதிற்கு சந்தேகத்தினையும் சங்கடத்தினையும் ஏற்படுத்துகிறது. இதனை ஒரு முறைக்குட்படுத்தி சீர்ப்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது.

**பரிந்துரைகள்**

இங்கு ஆண் நோயாளிகளுக்கு இரு மாடிகளினை கொண்ட C1, C2, B1, B2 என்ற 04 BlocksD அதே போல் பெண் நோயாளிகளுக்கும் A Block இன் கீழ் இரண்டு இருமாடிகளைக் கொண்ட கட்டடங்கள் நேர்த்தியாக அமையப்பெற்றிருக்கின்றன. நான் கூற விளைவது இங்கு நோயாளிகளை PCR பரிசோதனை செய்த பின்னரான நாள்களின் அடிப்படையில் பிரித்து தங்கவைக்கப்பட முடியும்.

1 தொடக்கம் 5 நாள்களான நோயாளிகளை கீழ்ப் பகுதியிலும் 6 ஆம் நாள் தொடக்கம் 10 நாள்கள் கொண்ட நோயாளிகளினை மேற்பகுதியிலும் தங்க வைக்கலாம் என்பது எனது கருத்து. இதனை ஆரம்பத்திலேயே நோயாளிகள் வைத்தியசாலையில் பதிவு செய்யப்படும் போதே நிர்வாகம் PCR எடுத்த நாள்களைக் கருத்திற்கொண்டு அவர்கள் தங்க வேண்டிய கட்டடப்பகுதி தொடர்பான முறையான விளக்கம் கொடுக்கப்படும் பட்சத்தில் அவர்கள் தாங்களாகவே இயங்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். முடிந்தால் அவர்கள் தங்கவைக்கப்பட வேண்டிய அறை எண்ணும் தெரியவைக்கப்படுவது சாலச்சிறந்தது. இதனால் எதிர்கொள்ளும் சாதக விடயங்கள் நிறையவே இருக்கும்.

இதன் மூலமாக நோயாளிகள் தாங்கள் தங்குமிடம் தெரியாது அல்லலுறுவதையும் ஏனைய இடர்பாடுகளையும் இருப்பாகவும் தவிர்த்து கொள்ளலாம்.



இந்த பொறிமுறையினை ஒழுங்குமுறையாக பதிவுகளை மேற்கொண்டு தெளிவுபடுத்தும் பட்சத்திலேயே வெற்றியளிக்கும். அத்துடன் நோயாளிகளுக்கு இருக்கும் அச்சத்தினையும் போக்கிக்கொள்ளமுடியும். ஆரம்பத்தில் இதனை செயற்படுத்த சற்று கடினமாக இருப்பினும் ஒரு பொறிமுறைக்குள் உள்வாங்கப்பட்ட பின்பு இலகுவான முறையில் இந்நடைமுறையைத் தொடரலாம் என்பனை தெளிவுப்படுத்துகிறேன்.

**அவதானிப்பு 7:**

**குறைபாடுகள் - தனிமைப்படுத்தல் (QUARANTINE)**

PCR பரிசோதனை எடுத்த தினத்திலிருந்து PCR முடிவு வந்து சிகிச்சை நிலையத்திற்கு அழைக்கும் வரையில் வீட்டு தனிமைப்படுத்தல் (HOME QUARANTINE) இருக்குமாறு அறிவறுத்தலுக்கமைய நாம் எவ்வளவு பக்குவமாக எல்லா அறிவுறுத்தல்களினையும் கடைப்பிடித்து வீட்டில் தனிமைப்படுத்தி இருக்கின்றோம். இக்காலப்பகுதியில் செய்ய வேண்டியவற்றை இறுக்கமாக கடைப்பிடித்து தனிமைப்படுத்தி இருக்கிறோம். ஆனால் சிகிச்சை நிலையத்தினுள் வந்ததுடன் இந்நிலைமை பாரிய இடைவெளி இருந்ததாக உணர்ந்தேன். வீட்டில் தனிமைப்படுத்தி இருந்து பின்பற்றிய சுகாதார நடைமுறைகளினைச் சுற்றறிக்கையின் பிரகாரம் தனிமைப்படுத்தி விட்டோம் என்ற நிலை காணப்பட்டது. வீட்டில் எவ்வளவு கவனமாகவும் இறுக்கமான கட்டுப்பாடுகளுடனும் இருந்து சிகிச்சை நிலையத்தில் காணப்படுகின்ற நடைமுறைகள் வேறு நோய்களினையும் ஏற்படுத்தக்கூடிய நிலையினை உணருவதாக அனைவருக்கும் ஒரு பயம் இருக்கிறது. இதுவும் ஒரு குறைபாடாகவே காணப்படுகிறது.

**பரிந்துரைகள்**

வீட்டுத்தனிமைப்படுத்தலுக்குட்படுத்தக்கூடிய வசதியினை கொண்டுள்ளவர்கள் சுகாதார வைத்திய அதிகாரிகளின் கண்காணிப்புகள் அறிவுறுத்தல்களுடன் வீட்டு தனிமைப்படுத்தலில் இருப்பது சாலச் சிறந்ததாக கருதுகிறேன். மற்றும் PCR முடிவின் CT பெறுமானத்தின் பிரகாரம் வகைப்படுத்தி அறிகுறியற்றவர்களுக்கு இம்முறை சாலச் சிறந்தது. இது எல்லோருக்கும் பொருத்தமானதாக அமைவதன் சாத்தியத்தன்மை குறைவாக இருக்குமெனினும் இவ்வசதியினை ஏற்படுத்தக்கூடியவர்களை அடையாளப்படுத்தி இவ்வாறு தனிமைப்படுத்திக்கொள்ள அனுமதிப்பது நல்லது. இதனால் சுகாதாரத் துறையினரது கண்காணிப்புடன் வீட்டுதனிமைப்படுத்தல் முறைமை உடனடியாக அமுலுக்கு கொண்டு வந்தால் நோயாளிகளுக்கும் அரசுக்கும் நன்மையளிக்கும்.

என்னால் இங்கு வைத்தியத்துறையினரின் அளப்பரிய சேவைகள், அர்ப்பணிப்பான செயற்பாடுகள், அவற்றில் அவதானிக்கக்கூடிய குறைபாடுகள், அவற்றுக்கான பரிந்துரைகள் தொடர்பாக தெரிவித்திருக்கின்றேன். இதன் மூலமாக இங்கிருக்கின்ற நோயாளிகளுக்கு தங்களின் சிறந்த சேவையைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படும் எனக்கருதியே குறிப்பிட்டிருக்கின்றேன். நான் கூற விரும்பியது குற்றம் கூற விளைவது எனது நோக்கல்ல. நல்லதொரு ஆரோக்கியமான விடயங்களை கருத்திலெடுத்து மேலும் திறம்படத் தங்களது சேவையை செய்ய வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே கூறியமையுடன் இதனை விட வேறு எந்தவித விமர்சனங்களையும் செய்வது எனது நோக்கல்ல.

**முடிவுரை**

எனக்கு PCR செய்து அதன் முடிவுகளின் பிரகாரம் சிகிச்சை முடித்து வீட்டுதனிமைப்படுத்தல் காலத்தினையும் நிறைவு செய்துள்ள நிலையில், எனது மனைவிக்கு Exit PCR செய்ய வேண்டுமென்ற அரச வழிகாட்டலின் பிரகாரம் PCR பரிசோதனை செய்யப்படல் வேண்டும். ஏனைய எனது குடும்பத்தார் எனது வயது முதிர்ந்த பெற்றோர் மற்றும் மகள் வீட்டின் ஒருபகுதியில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தமையினால் எங்களுடன் நேரடித்தொடர்யைப் பேணவில்லை என்ற அடிப்படையில் அவர்களுக்கான PCR பரிசோதனை செய்யப்படவில்லை. நானும் எனது மனைவியும் மட்டுமே எனது அன்ரியின் மரணசடங்கில் நேரடியாக கலந்து கொண்டு நேரடி தொடர்பில் இருந்தமையினால் எனது மனைவிக்கு 08.06.2021 PCR பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் முடிவுகள் சாதகமாக அமைந்தமையால் எனது குடும்பம் நான்கு வாரங்களின் பின்னர் முழுமையாக விடுவிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டு, பின்னர் எனது சிறிய தாயார் அமரர் தவபாலரத்தினம் கமலகுமாரி அவர்களின் ஆன்ம சாந்திக் கிரியைகள் (அந்தியேட்டி) கடமைகளில் 12.06.2021 அன்று கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் 14.06.2021 வீட்டிலும் எனது குடும்பத்தவர்களின் பூரண பங்களிப்புடன் கலந்து எமது கடமையை திருப்தியாக நிறைவேற்ற நல்லூர் கந்தனிடம் வேண்டுதல் எமக்கு அருள் பாலித்துள்ளான் என நினைக்கும்போது அவன்பால் வாழ்நாளில் பக்தி கொள்ள மனம் கொள்கின்றது.

எனது முகவுரையில் கூறியது போல் பிரச்சனை ஒன்று உருவாகும் போது அதற்கான தீர்வுகளை அடைவதற்கான வாய்ப்புக்களையும் இயற்கை எமக்கு தந்திருக்கிறது என்பதை அனுபவரீதியாக உணர எனக்கு கொரோனா வைரஸ் என்கின்ற வடிவில் கிடைத்த ஓர் வாய்ப்பை இந்த அரிய அனுபவத்தினை இனியும் குறித்த நோய்த்தாக்கத்தினை அல்லது இதுபோன்ற வேறு நோய்த்தாக்கங்களை எதிர்கொள்ள இருக்கின்ற எமது சமூகத்திற்கு இக்கட்டுரையினூடாக அனுபவ பகிர்வாக கொவிட் – 19 தொடர்பாக நான் அறிந்த விஞ்ஞான ரீதியான தேடல்களின் மூலம் தகவல்களைப் பெற்று மேலதிக தகவலுக்காகவும் வரலாற்றுப் பதிவிற்காகவும் தொகுத்தளித்துள்ளேன்.

அதே வேளை நான் சிகிச்சை பெற்ற கோப்பாய் வைத்தியசாலையின் வைத்தியத்துறையினரின் அளப்பரிய சேவைகள், அர்ப்பணிப்பான செயற்பாடுகள், அவற்றில் அவதானிக்கக்கூடிய குறைபாடுகள் அவற்றுக்கான பரிந்துரைகள் தொடர்பாகவும் தெரிவித்திருக்கின்றேன். முடிவாக இந்த அனுபவ பகிர்வு நூலை முழுமையாக வாசித்து இக்கொடிய கொள்ளை நோயிலிருந்து ஒருவரையாவது காப்பாற்ற முடியுமாயின் நாம் சந்தித்த இந்த தற்காலிக நெருக்கடியிலிருந்து மீண்டு வர ஓர் உந்துதலை கொடுக்கும் என்பதையும் எமது சமூகத்திற்கு ஏதோ ஓர் வகையில் பங்களிக்க இதை வாள்ப்பாகவும் அதேவேளை எமது குடும்பத்தின் மூல விருட்சமாகவும் எமது வழிகாட்டியாகவும் இருந்து அமரத்துவம் அடைந்த எனது தாய் மாமன் அமரர் அ. விஜயரட்ணம் அவர்களுக்கும் எனது சிறிய தாயாரான அமரர். த. கமலகுமாரி அவர்களுக்கும் எனது அனுபவ பகிர்வை அவர்களுக்கு சமர்ப்பணம் செய்தல் எனது பாக்கியமாக கருதுகின்றேன்.

காலைக்கதிர் Kalaikkathir

# இந்து ஆலய திருவிழாக்களுக்கு சுகாதார அமைச்சு அனுமதித்தது

## மட்டு. அரச அதிபர் தெரிவிப்பு

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு, ஜூலை 02

இந்து ஆலயங்களில் வழக்கமான பூஜைகள், பிரார்த்தனைகள் மற்றும் ஆலய திருவிழாக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினருடன் அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட கொவிட் தடுப்பு செயலணியின் தலைவருமாகிய கே.கருணாகரன் மாவட்ட செயலக ஊடகப்பிரிவிற்கு தெரிவித்துள்ளார்.

கொவிட் மூன்றாவது அலை மிகவும் உக்கிரமடைந்து காணப்பட்ட காலப்பகுதியில் சுகாதார அமைச்சால் இந்து ஆலயங்களில் நிகழ்த்தப்படும் வழமையான பூஜைகள், பிரார்த்தனைகள் மற்றும் திருவிழாக்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தன.

தற்போதைய கொவிட் நிலையைக் கருத்திற்கொண்டு இந்து ஆலயங்களில் வழமையாக இடம்பெறும் நித்திய பூஜைகள் மற்றும் பிரார்த்தனைகளை அதிகபட்சமாக ஐந்து பேருடன் நடத்தலாமென்றும், வருடாந்த திருவிழாக்களை பொது மக்களது பங்குபற்றுதலுடன் நடத்த முடியாதெனவும், அதிகபட்சமாக 15 ஆலய பரிபாலன சபை உறுப்பினர்களின் பங்கேற்புடன் குறித்த பகுதிக்கான சுகாதார வைத்திய




அதிகாரியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுடன் நடத்துவதற்கு சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் அனுமதியளித்துள்ளார் என மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் இதன்போது தெரிவித்துள்ளார்.

# வீடுகளின் விலைகளில் திடீரென ஏற்பட்ட மாற்றம்

கொவிட் தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் இலங்கை பிரபல சொகுசு மாடி வீடுகளின் விற்பனைகள் அதிகளவில் அதிகரித்துள்ளன.

கடந்த வருடத்தின் இறுதி காலாண்டுடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தின் முதல் காலாண்டில் (ஜனவரி – மார்ச்) இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளுக்கமைய இந்த வருடத்தின் முதலாம் காலாண்டில் விற்பனைக்காக தயாரான வீடுகளில் 92 வீதமானவை விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சொத்துக்கள் தொடர்பில் நடத்தப்பட்ட புதிய ஆய்வில் இந்த விடயம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 2.5 கோடி ரூபா வரை விலையில் உள்ள வீடுகளை கொள்வனவு செய்வதற்கு அதிக கோரிக்கைகள் உள்ளன எனத் தெரிய வந்துள்ளது.

இந்த வீடுகளின் கொள்வனவாளர்களில் பெரும்பான்மையானோர் இலங்கையர்கள் என ஆய்வில் தெரிய வந்துள்ளது. அத்துடன் கொள்வனவு செய்யப்பட்ட வீடுகளில் உடனடியாக குடியேறியுள்ளனர். மேலும் இந்த வீடுகளில் பெரும்பான்மையானவற்றை கொள்வனவு செய்வதற்கு வங்கிக் கடன் உதவியுள்ளது.

# திருக்கோவில் பிரதேச செயலக உயரதிகாரி ஒருவருக்கு கொவிட்



**( வி.ரி.சகாதேவராஜா)**

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பணியாற்றிய உயரதிகாரியொருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதையடுத்து பிரதேச செயலாளர் தொடக்கம் 57 உத்தியோகத்தர்கள் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

பிரதேசசெயலாளர் த.கஜேந்திரன், உதவி திட்டமிடல் அதிகாரி செல்வி எம்.அனோஜா உள்ளிட்ட 57 உத்தியோகத்தர்கள் தங்கள் தங்கள் வீடுகளில் எதிர்வரும் எட்டாம் திகதி வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை தொற்றுக்குள்ளான உயரதிகாரி தற்சமயம் பாலமுனை இடைத்தங்கல் நிலையத்தில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளார். அவரது குடும்பமும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலகத்தில் 58 பேருக்கு அன்டிஜன் சோதனை மேற்கொள்ளப்பட்டபோது ஒருவரைத்தவிர ஏனையோருக்கு தொற்றில்லை எனத் தெரியவந்தது.

எனினும் ஒருவர் தொற்றுக்குள்ளாகி இனங்காணப்பட்ட காரணத்தால் அவருடன் பணியாற்றிய ஏனைய 57 பேரையும் அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்த சுகாதாரப்பகுதியினர் நடவ டிக்கை எடுத்திருந்தனர்.

முக்கிய பொறுப்பபுக்களிலுள்ள பெரும்பாலான உத்தியோகத்தர்கள் இவ்விதம் தனிமைப்படுத்தலுக்குட்பட்டிருந்தபோதிலும் பிரதேச செயலகம் மூடப்படவில்லை.

மாறாக நிர்வாக உத்தியோகத்தர் பி.நடேசன் தலைமையிலான குழுவினர் அலுவலக நடவடிக்கை களை முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உதவிப்பொருளாளராக வவுனியா இளைஞர்

வவுனியா, ஜூலை 02

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உதவிப்பொருளாளருக்கான தேர்தலில் வவுனியாவைச் சேர்ந்த அருணகிரிநாதன் நாகராஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் புதிய நிர்வாக சபை தேர்தல் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இந்தத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி உதவிப்பொருளாளர் பதவிக்கு அ.நாகராஜன் போட்டியிட்டிருந்தார்.

இந்நிலையில், தேர்தலில் வெற்றி பெற்று குறித்த பதவிக்கு அவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.




இவர் நான்கு வருடங்கள் வவுனியா மாவட்ட உதைப்பந்தாட்ட சங்கத்தின் பொதுச்செயலாளராகவும், இரண்டு வருடங்கள் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முக்கிய பதவிக்கு வவுனியாவில் இருந்து ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# பல்வேறு கோரிக்கைகளினை முன்வைத்து தாதியர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டம்

பதவி உயர்வு மற்றும் தாதியர் யாப்பில் மாற்றங்களை ஏற்படுத்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் தாதியர்கள் சங்கம் ஈடுபட்டுள்ளது.

இந்தப் போராட்டம் நேற்று (வியாழக்கிழமை), இன்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்படவுள்ளதாக தாதிய தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

எவ்வாறிருப்பினும், கொரோனா வைத்தியசாலைகள், சிகிச்சை மையங்கள் மற்றும் விசேட வைத்தியசாலைகள் என்பனவற்றில் இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படமாட்டாது என அந்த சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

அவசர மற்றும் அத்தியாவசிய சேவைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நேற்றைய வினாக்களுக்கான விடைகள்

தரம் - 9 | கணிதம் | அலகு 12

**01.**
1. $2^5$
2. $3^4$
3. $a^6$
4. $2^3 \times y2$
5. $5^2 \times m^3 \times a^2$
6. $2^6 x p^2$

**02.**
1. $2^4 \times 3^4 x 5^4$
2. $3^{10} \times y^{10}$
3. $2^{12} \times a^{12} x b^{12}$
4. $5^6 \times 2^6 \times X^6$
5. $m^5 \times a^5 \times b^5$
6. $a^5 \times b^5$

**03.**
1. $(my)^8$
2. $(mn)^8$
3. $(5ym)^6$
4. $(2ya)^{10}$
5. $(5pq)^6$
6. $(2ab)^4$

**04.**
5. $x^9$
6. $x^7$
7. $2x^8$
8. $10p^5$
9. $2m^3n^2$
10. $x^{33}$
11. $6a^{14}$
12. $m^{18} \times n^{15}$
13. $10\ x^{15}y^{15}$
14. $a^7 b^5 c^{11}$
15. $60\ a^3 b^5$

**05.**
4. $m^{13}$
5. $a^2$
6. $x^5$
7. $2x^5$
8. $2p^3$
9. $9y^6$
10. $5m^3$
11. $n^3$
12. $\frac{x^3}{2}$
13. $X^2$
14. $8p^6q^{-4}$
15. $4p^3q^2$

**06.**
1. $\frac{1}{3^4}$
2. $\frac{1}{x^3}$
3. $\frac{2}{x}$
4. $\frac{5p^2}{q^2}$
5. $3x^2$
6. $2x^5$
7. $\frac{ab^3}{2}$
8. $\frac{m^2}{4x^2}$
9. $\frac{1}{mt^2}$
10. $pq^2$
11. $\frac{x^2}{y^2}$
12. $\frac{4y^2}{9x^2}$

**07.**
1. $\frac{1}{4}$
2. $\frac{1}{1000}$
3. $-\frac{1}{64}$
4. 16
5. $\frac{16}{9}$
6. $\frac{1}{128}$
7. $\frac{1}{25}$
8. $\frac{1}{9}$
9. 125
10. $\frac{9}{4}$

**08.**
1. 3
2. -1
3. $\frac{9}{4}$
4. 1
5. 2
6. 1
7. 0
8. 1

**09.**
1. $2^6$
2. $\frac{1}{9}$
3. $a^4b^4$
4. $8x^6$
5. $p^8$
6. $y^2$
7. $x^9$
8. $a^2$
9. $\frac{n^6}{m^6}$
10. a

ஆக்கம் : தாமினா சுபாகரன் (கட்டுருபயில்வு மாணவ ஆசிரியை)
யா/செங்குந்த இந்துக் கல்லூரி

வழிகாட்டலும் ஆலோசனையும் : - திரு ஞானமணி இரத்தினசிங்கம்
(ஓய்வுநிலை விரிவுரையாளர்)
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை விமானங்கள் துருக்கியில் இறங்கத் தடை




இலங்கை உள்ளிட்ட ஐந்து நாடுகளில் இருந்து வரும் விமானங்களுக்கு துருக்கி அரசு தடை விதித்துள்ளது.

துருக்கி உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்துள்ளது.

அதன்படி, பங்களாதேஷ், பிரேஸில், தென்னாபிரிக்கா, இந்தியா, நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து வரும் விமானங்களுக்குத் தடை விதித்துள்ளது.

மேலும் மறு அறிவிப்பு வரும் வரையில் இந்தத் தடை அமுலில் இருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸின் புதிய மாறுபாடுகள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அமைச்சகம் மேலும் கூறியுள்ளது.

சுகாதார அமைச்சின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, இந்த நாடுகளில் இருந்து நிலம், காற்று, கடல் அல்லது ரயில்வே உள்ளிட்ட எந்தவொரு நேரடி உள்ளீடுகளுக்கும் துருக்கி தனது எல்லைகளை மூட முடிவு செய்துள்ளது.

கடந்த 14 நாள்களுக்குள் அந்த நாடுகளில் ஒன்றில் இருந்தபின் மற்றொரு நாட்டிலிருந்து துருக்கிக்கு வரும் பயணிகள் கடந்த 72 மணி நேரத்தில் நடத்தப்பட்ட எதிர்மறையான பி.சி.ஆர். சோதனை முடிவுகளை வைத்திருக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# சேதனப்பசளையை உற்பத்தி செய்ய கால்நடை பண்ணைகள் அமைப்பு

## மட்டக்களப்பில் நடந்தது கலந்துரையாடல்

எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் நஞ்சற்ற உற்பத்திக்காக சேதனப்பசளையினை பயன்படுத்தும் திட்டத்திற்கு அமைவாக சேதனப்பசளையை உற்பத்தி செய்வதற்காக கால்நடை பண்ணைகளை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடந்த புதன்கிழமை மாலை நடைபெற்றது.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக நஞ்சற்ற உணவை எவ்வாறு உற்பத்தி செய்வது, அதற்கான சேதனை உரத்தை உற்பத்தி செய்வதற்கான பண்ணையை அமைப்பதற்கான நடைமுறைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் கால்நடைகள் இராஜாங்க அமைச்சர் டி.பீ.ஹேரத் கலந்துகொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், அமைச்சின் செயலாளர்கள், கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள், மில்கோ நிறுவனத்தின் உயரதிகாரிகள், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீஸன், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட செயலகங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட விடயத்துடன் தொடர்புடைய ஏனைய திணைக்களங்களின் உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும்



கால்நடை பண்ணைகளை அமைப்பது தொடர்பில் இங்கு ஆராயப்பட்டது. குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இதனை அமைப்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது மாதிரிப் பண்ணைகளை அமைத்து அதிலிருந்து பால் உற்பத்தியை எவ்வாறு அதிகரிக்கச் செய்வது, கால்நடைகளுக்கான உணவை அதிலேயே உற்பத்திசெய்தல், பண்ணையிலிருந்து சேதனப் பசளைகளை உற்பத்திசெய்து அதனை விவசாயிகளுக்குவிநியோகம்செய்வதுதொடர்பாகஆராயப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு, களுவாஞ்சிகுடி, கொக்கட்டிச்சோலை, கரடியனாறு, கிரான், மயிலத்தமடு ஆகிய பகுதிகளிலும் அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை நகர், உகன, திருக்கோவில், தெகியத்தன்கண்டி ஆகிய பகுதிகளிலும் பண்ணைகளை அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சுமார் மூன்று லட்சம் கால்நடைகள் காணப்படும் நிலையில் அவற்றினையும் உச்ச நிலையில் பயன்படுத்துதல் குறித்தும், புதிய கால்நடை பண்ணைகளை அமைத்தல் தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவுனியாவில் தாதியர் பணிப்புறக்கணிப்பு



வவுனியா, ஜுலை 02

பதவி உயர்வு மற்றும் தாதியர் யாப்பில்மாற்றங்களைஏற்படுத்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா வைத்தியசாலை தாதியர்களும் நேற்று (வியாழக்கிழமை) சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டு வந்த தாதியர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக வைத்தியசாலை நோக்கி வருகை தந்த நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

தூரப் பிரதேசங்களிலிருந்து வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகை தந்த முதியவர்கள், தாய்மார்கள், உள்ளிட்ட பலரும் வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெறாமல் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

முற்கூட்டியே இந்த பணிப்புறக்கணிப்பு தெரியாத காரணத்தால் பணம் செலவழித்து, சிரமத்தின் மத்தியில் வைத்தியசாலைக்கு வர வேண்டிய சூழ்நிலை உருவாகி இருக்காது என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# புங்குடுதீவு, அல்லைப்பிட்டி பகுதியில் 100 குடும்பங்களுக்கு உலருணவு





சென்.லூசியா நாட்டில் வசிக்கும் ராஜ்ஜின் நிதிப்பங்களிப்பில் புங்குடுதீவு மற்றும் அல்லைப்பிட்டி பகுதிகளில் கொரோனா காரணமாக தொழில் வாய்ப்புக்களை இழந்த 100 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வேலணை பிரதேச சபை உறுப்பினர் அசோக்குமார் ஆகியோரால் வழங்கி வைக்கப்பட்டன.


நாட்டில் நீடிக்கப்பட்டிருந்த பயணத் தடை மற்றும் ஊரடங்குச் சட்டம் காரணமாக தொழில் வாய்ப்பை இழந்த ஏராளமான குடும்பங்கள் அன்றாட உணவுக்கு பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தாயக தேசத்தில் மக்களின் வறுமையை போக்கும் விதமாக புலம்பெயர் உறவுகள் தனிப்பட்ட ரீதியாகவும், ஊர்சங்கங்களின் ஊடாகவும், நிறுவனங்களின் ஊடாகவும் பல விதமாக உதவி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியா நகரம் இராணுவம், பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை

## முடிவுகளையடுத்து அடுத்தகட்ட நடவடிக்கை





(வவுனியா நிருபர்)

வவுனியா நகரப் பகுதி இராணுவம் மற்றும் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட நிலையில், சுகாதாரப் பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இன்று காலை வவுனியா நகரின் பசார் வீதி, மில் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை உள்வட்ட வீதி என்பன இராணுவம்மற்றும்பொலிஸாரால்சுற்றிவளைக்கப்பட்டு குறித்த பகுதியில் இருந்து மக்கள் வெளியேறத் தடை விதிக்கப்பட்டு நான்கு இடங்களில் சுகாதாரப் பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பசார் வீதி சந்தி, தர்மலிங்கம் வீதி சந்தி, சந்தை உள்வட்ட வீதி சந்தி, மில் வீதியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி என்பவற்றில் வைத்து சுகாதாரப் பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது வர்த்தக நிலையங்களில் பணியாற்றியோர், நகருக்குப் பல்வேறு தேவைகளுக்காக வருகை தந்தோர், வாகனச் சாரதிகள் என சுமார் 400 இற்கு மேற்பட்டவர்களுக்கு இதன்போது பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், பி.சி.ஆர். எடுத்த பின்பே மக்கள் நகரில் இருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த பி.சி.ஆர். முடிவுகளையடுத்து அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (100)

# வவுனியாவில் 30 பேருக்கு கொரோனா

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் 30 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையின் முடிவுகள் புதனிரவு வெளியாகின.

அதில், தவசிகுளம் பகுதியில் பத்துப் பேருக்கும், நெடுங்கேணிப் பகுதியில் ஒருவருக்கும், பூந்தோட்டம் பகுதியில் இருவருக்கும், பெரியார்குளம் பகுதியில் இருவருக்கும்,

திருநாவற்குளம் பகுதியில் மூவருக்கும், கற்குளம் பகுதியில் ஒருவருக்கும், சிதம் பரம் பகுதியில் ஒருவருக்கும், ஆச்சிபுரம் பகுதியில் இருவருக்கும், மாமடு பகுதியில் மூன்று பேருக்கும், அலகல்ல பகுதியில் ஒருவருக்கும், பெரியஉளுக்குளம் பகுதியில் ஒருவருக்கும், இறம்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், பொலிஸார் இரு வருக்கும் என 30 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்கள் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு இன்று அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)

# மீசாலையிலும் வாள்வெட்டு; இளைஞர் ஒருவர் படுகாயம்

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

மோட்டார் சைக்கிளில் வந்த 4 பேர் வீதியால் நடந்து சென்ற இளைஞர் மீது தாக்குதல் நடத்தி யுள்ளதுடன், சரமாரியாக வாளால் வெட்டி விட் டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் மீசாலை - புத்தூர் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மந்துவில் பகுதியைச் சேர்ந்த 23 வயதான இளைஞர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளார்.

பஸ்ஸில் பயணித்த குறித்த இளைஞர் மீசாலை - புத்தூர் சந்தியில் இறங்கி நடந்து சென்று கொண்டிருந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் வந்த 4 பேர் இளைஞரை வழிமறித்துத் தாக்குதல் நடத்தியுள்ளதுடன், வாளால் சரமாரியாக வெட்டி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் தலை, கை, கால் ஆகியவற்றில் படுகாயமடைந்த இளைஞர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளார்.

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில் வாள்வெட்டு சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மேலும் 403 பேர் கைது!

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 403 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 45 ஆயிரத்து 935 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மாகாணப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை மீறி மேற்கு மாகாணத்துக்குள் நேற்று நுழைய முயன்ற 107 நபர்கள் 59 வாகனங் களுடன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

# வவுனியா நகரம் இராணுவம், பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை

## முடிவுகளையடுத்து அடுத்தகட்ட நடவடிக்கை







(வவுனியா நிருபர்)

வவுனியா நகரப் பகுதி இராணுவம் மற்றும் பொலிஸாரால் சுற்றிவளைக் கப்பட்ட நிலையில், சுகாதாரப் பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக் கப்பட்டது.

வியாழன் காலை வவுனியா நகரின் பசார் வீதி, மில் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை உள்வட்ட வீதி என்பன இராணுவம் மற்றும் பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டு குறித்த பகுதியில் இருந்து மக்கள் வெளியேறத் தடை விதிக்கப்பட்டு நான்கு இடங்களில் சுகாதாரப் பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பசார் வீதி சந்தி, தர்மலிங்கம் வீதி சந்தி, சந்தை உள்வட்ட வீதி சந்தி, மில் வீதியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி என்பவற்றில் வைத்து சுகாதாரப் பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது வர்த்தகநிலையங்களில் பணியாற்றியோர், நகருக்குப் பல்வேறு தேவைகளுக்காக வருகை தந்தோர், வாகனச் சாரதிகள் என சுமார் 400 இற்கு மேற்பட்டவர்களுக்கு இதன்போது பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், பி.சி.ஆர். எடுத்த பின்பே மக்கள் நகரில் இருந்து வெளியேற அனுமதிக் கப்பட்டனர்.

குறித்த பி.சி.ஆர். முடிவுகளையடுத்து அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

# ரிஷாத்தின் கட்சியை புறக்கணித்தது ஏன்?

## மனோ, ஹக்கீமிடம் பாயிஸ் கேள்வி



தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில், மூன்று கட்சிகள் இணைந்து நடத்திய சந்திப்பு, பாதிக்கப்படப்போகும் சிறுபான்மைக் கட்சிகளுக்கும், சிறு கட்சிகளுக்கும் ஒரு உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்துள்ள முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான ஏ.ஜே.எம். பாயிஸ், இந்தச் சந்திப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் புறக்கணிக் கப்பட்டது ஏன் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் தனது வருத்தத்தைத் தெரிவித்து பாயிஸ் வியாழன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

தேர்தல் முறைகளை மாற்றவேண்டும் என்பது தொடர்பில் அரசும் ஆளுங் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் விடாப்பிடியாக நின்று காய்களை நகர்த்தி வரும் இத்தருணத்தில், அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பியும், ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியும், கொழும்பில் நேற்று சந்தித்து, இது தொடர்பில் ஆராய்ந்துள்ளதுடன் காத்திரமான முடிவுகளையும் மேற்கொண்டிருப்பதாக இன்று ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிந்தது.

கடந்த காலங்களில் இவ்வாறான அனைத்துச் சந்திப்புக்களிலும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அழைக் கப்பட்டிருந்ததுடன் அதன் தலைவர் ரிஷாத் பதியுதீன் பிரதான பாத்திரமும் வகித்திருந்தார்.

கடந்த அரசின் அரசமைப்பு வழிகாட்டல் குழு, அரசியல் யாப்பு சபையிலும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் முக்கிய பங்காற்றியதுடன், இந்தக் கட்சிகளுடன் இணைந்து கூட்டாகவும் தனியாகவும் அறிக்கைகள் சமர்ப்பித்திருந்தமையையும் நாம் இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நாடாளுமன்றத்தில் நான்கு எம்.பி க்களையும், உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் சுமார் 150இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகளையும் பெற்றிருப்பதும், 08 உள்ளூராட்சி சபைகளை ஆளுகை செய்வதும் வெளிப்படையானது.

அத்துடன், மேல் மாகாண சபை உட்பட நாட்டின் பல மாகாண சபைகளில் பிரதிநிதிகளையும் வென்றெடுத்திருக் கின்றது. இந்தச் சூழலில் கட்சித் தலைவர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸை ஓரங்கட்டியது ஏன்?

தலைவர் ரிஷாத் பதியுதீனை தடுப்புக் காவலில் வைத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு மேலும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. தேர்தல்கள் தொடர்பில் ஆராயும் தெரிவுக்குழுவில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இடம்பெறாத நிலையில், ஆகக் குறைந்தது இவ்வாறான கூட்டங்களிலாவது கட்சியை அழைத்திருக்க வேண்டுமல்லவா?

தலைவரின் தடுப்புக் காவலையடுத்து கட்சியின் உயர்பீடம் கூடி, அவரது பொறுப்புக்களை சில முக்கியஸ்தர்களுக்கு பகிர்ந்தளித்துள்ள நிலையில், பிரதித் தலைவர், செயலாளர், தவிசாளர் ஆகியோருக்கேனும் அழைப்பு விடுத்து இந்தக் கூட்டத்தில் கட்சியின் பிரதிநிதிகளுக்கு அந்தஸ்து வழங்கியிருக்கலாமே - என் றுள்ளது.

# கொரோனாவின் தாக்கத்தால் யாழில் இரு இடங்கள் முடக்கம்

யாழ்ப்பாணம், கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 4 பிரதேசங்கள் வியாழன் காலை 6 மணி முதல் மறுஅறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதன்படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஊர்காவற்றுறைபொலிஸ்பிரிவுக்குட்பட்ட காரை நகர் கிராம சேவகர் பிரிவில் கள்ளித்தெரு மற்றும் கல்வந்தாழ்வு ஆகிய பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கண்டி மாவட்டத்தில் கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுதுஹும் பல மேற்கு கிராம சேவகர் பிரிவில் வேலமத பரணகம பகுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டன்சி னன் கிராம சேகவர் பிரிவின் மத்திய பகுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி மேலும் கூறினார்.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.